PERIODICAL
JAFFNA PUBLIC LIBRARY

ISSN 1391-9504

# Vijey விஜயி விஜய்

11.05.2016 - மலர் 13, இதழ் 11

## பாடசாலை 2 ஆம் தவணை...



விலை ரூபா 15/-

## மனிதர்களின் வளர்ப்புப் பிராணிகள்



## ரகசிய காப்பகங்கள்

## உலகின் அற்புதக் குகைகள்

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1. இங்கு எத்தனை திராட்சைக் குலைகள் காணப்படுகின்றன?

..........................................................

2. திராட்சைப் பழங்கள் எங்கே காய்க்கின்றன?

1. மரத்தில் 2. செடியில் 3. கொடியில்

3. 'திராட்சை' என்பதன் ஆங்கிலப் பதம் யாது?

..........................................................

4 திராட்சைப் பழங்களைப் பறிக்க முடியாமல் போனதும், "சீ..சீ.. இந்தப் பழம் புளிக்கும்" எனக் கூறிய விலங்கு எது?

..........................................................




1. நாம் நால்வரும் ..........................................

(எதிரிகள் / நண்பர்கள்)

2. நாம் ஒரே வகுப்பில் கல்வி ......................

(பாடம் / கற்கின்றோம்)

3. நீல நிறக் காற்சட்டை அணிந்திருப்பவன் ............................... ஆவான்.

(கெவின் / ஜேம்ஸ்)

4. ஜெனி .................... நிறச் சட்டை அணிந்திருக்கின்றாள்.

(மஞ்சள் / பச்சை)

1. இங்குள்ள காட்சிகள் இடம்பெற வேண்டிய ஒழுங்குமுறையை 1,2,3,4 என முறையே இலக்கமிட்டுக் காட்டுக.


கைகளைத் துடைத்தல்


பூங்காவில் விளையாடல்


கைகளைக் கழுவுதல்



பகல் உணவு உட்கொள்ளல்



2. ஒழுங்குபடுத்தப்பட்ட காட்சிகளை விவரித்து சிறிய பந்தியொன்றை அமைக்க.

..........................................................
..........................................................
..........................................................
..........................................................
..........................................................
..........................................................

**மரங்களைப் பாதுகாப்போம்**



1. மரங்களினால் எமக்குக் கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக.

..........................................................
..........................................................

2. மரங்களை அழிப்பதனால் ஏற்படும் பாதிப்புகள் இரண்டு தருக.

..........................................................

**அழகிய கடற்கரை**



1. கடற்கரையில் நீங்கள் காணக்கூடியவற்றைக் குறிப்பிடுக.

..........................................................
..........................................................

2. கடற்கரையில் சிறுவர்கள் என்னென்ன விளையாட்டுக்களை விளையாடுவார்கள்?

..........................................................
.......................................... - ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்காரியங்களில் ஈடுபட தயக்கம் காட்டாதீர்!



நாம் வாழும் சூழலில் எப்பொழுதும் நல்ல செயல்களும் தீய செயல்களும் இடம்பெற்றுக் கொண்டு இருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. இதுவே, நம் வாழ்க்கையின் இயல்பு நிலையாகும். ஆனால், நல்ல-தீய செயல்களுக்கு இடையே வாழும் நாம், நல்லவற்றை மட்டுமே தெரிவுசெய்து வாழத் தெரிந்திருக்க வேண்டும். நற்காரியங்களில் ஈடுபடுவதனூடாகவே, நல்ல வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற்கான வாய்ப்பு நமக்குக் கிட்டுகின்றது.





எனவே, இதனை உணர்ந்து பாடசாலை பருவம் முதலே அனைவரும் நற்காரியங்களில் ஈடுபடல் வேண்டும். மனிதர்களாகப் பிறந்த நாம் அனைவரும் நற்பண்புகளைக் கொண்டிருப்பது அவசியமாகும்.

மாணவப் பருவத்தி லுள்ள நீங்கள், உங்களை அழகுபடுத்திக்கொள்ளவும் சுவையான உணவுகளை உட்கொள்ளவும் மனதை உற்சாகமாக வைத்துக் கொள்ளவும் பெரும் முயற்சிகளை எடுக்கின்றீர்கள். ஆனால், இந்த முயற்சிகளில் ஒரு சதவீதத்தினையாவது நல்ல காரியங்களை செய்வதற்கு பயன்படுத்துகின்றோமா? என்று சிந்தித்துப் பாருங்கள்.

விஜய
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

## வீடுகளில் இருந்தே ஆரம்பிக்கலாம்...

நாம் கட்டாயமாக நமது அன்றாட நடவடிக்கைகளோடு, நற்காரியங்களை செய்வதற்கான நேரத்தையும் ஒதுக்கிக் கொள்ள வேண்டும். உங்கள் வீடுகளிலிருந்தே அதனை ஆரம்பிக்கலாம். தாய்-தந்தையை மதித்தல், அவர்களின் அறிவுரைகளைக் கேட்டு நடத்தல், அவர்களுக்கு உதவுதல், வயோதிப நிலையை அடைந்திருக்கும் பாட்டி - தாத்தாவுக்கு உதவுதல் என்பன வீட்டில் நீங்கள் செய்யக்கூடிய உன்னதமான நற்காரியங்களில் சிலவாகும். அவ்வாறே, தினமும் இறைவனை வழிபடுங்கள்.

நீங்கள் வாழும் சூழலில் இருக்கும் உயிரினங்களுக்கு உணவளியுங்கள். அவற்றுக்கு இடையூறு செய்யாதீர்கள். அணிவதற்கு ஆடைகள் இன்றியும், உண்பதற்கு உணவின்றியும் வாடுபவர்களுக்கு உதவுங்கள். உங்கள் உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள்கூட இவ்வாறான துன்பங்களால் வாடுபவர்களாக இருக்கக் கூடும். இன்றைய உலகில் வறுமையினால் கல்வி கற்க முடியாமல் அநேகமானோர் இருக்கின்றனர். எனினும், அவர்கள் தமக்குத் தேவையான உதவிகளை வாய்விட்டுக் கேட்க முடியாமல் இருப் பார்கள். அவ்வாறானவர்கள் உங்கள் வகுப்பறையில்கூட இருக்கலாம். எனவே, அத்தகைய நண்பர்களுக்கு உதவ மறவாதீர்கள். உங்களால் மற்றவர்களுக்கு துன்பம் நேராமல் பார்த்துக்கொள்ளுங்கள். மற்றவர்களின் மனதை நோகடிக்கும் செயல்களில் ஈடுபடாதீர்கள்.



## இந்த வாய்ப்பை தவறவிடாதீர்கள்

நற்காரியங்கள் செய்வதற்கு கிடைக்கும் வாய்ப்பினை ஒருபோதும் தவறவிடாதீர்கள். அவ்வாறான சந்தர்ப்பங்கள் கிடைப்பதென்பது, வாழ்நாளில் நாம் பெறும் அதிர்ஷ்டமென்றும் கூறலாம். எவரே னும் உங்களிடம் உதவி கேட்டு வந்தால், தயக்கமின்றி அவர்களுக்கு உதவுங்கள். சுயநலம் அற்ற வாழ்க்கையை வாழப் பழகிக்கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருங்கல்லும் சிற்பியும்




ஒருநாள் சிற்பி ஒருவர் வீதியோரமாகப் போய்க்கொண்டிருந்தார். அப்போது ஒரு கடையருகே பெரிய கருங்கல் ஒன்றைப் பார்த்தார். ஏதோ பெரிய புதையலைப் பார்த்த மகிழ்ச்சியில் சிற்பி அந்தக் கடைக்காரரிடம், "ஐயா! இந்தக் கருங்கல் உங்களுக்குத் தேவையா? இதை நான் எடுத்துச் செல்லலாமா?" என்று கேட்டார்.

"தாராளமாக எடுத்துச் செல்லுங்கள். இது இந்த இடத்தில் பெரிய இடையூறாக உள்ளது. கடைக்குப் போவோர் வருவோர் எல்லோரும் இதனால் தடுமாறி விழுகின்றனர்" என்றார் கடைக்காரர். கருங்கல்லை உருட்டிச் சென்ற அந்த சிற்பி, ஆறு மாதங்களாக அதனை நுட்பமாகச் செதுக்கி அற்புதமான கடவுள் சிலை ஒன்றை உருவாக்கினார். அந்தச் சிலையை அவரின் கடையில் விற்பனைக்கு வைத்தார். அந்த சிலையின் அழகால் கவரப்பட்ட மக்கள் பலர் போட்டி போட்டுக்கொண்டு அதை விலைக்குக் கேட்டனர். அப்படிக் கேட்டவர்களுள் கல்லைக் கொடுத்த கடைக்காரரும் ஒருவர்.

முடிவில் அந்தக் கடைக்காரரே அதிக விலை கொடுத்து அந்தச் சிலையை வாங்கினார். "இந்த அற்புதமான சிலைக்குரிய கல்லை எந்த மலையிலிருந்து எடுத்து வந்தீர்கள்?" என்று சிற்பியிடம் கேட்டார். அதற்கு சிற்பி "வேறு எங்கிருந்தும் இல்லை. உங்கள் கடை வாசலில்தான் இதைக் கண்டெடுத்தேன். உங்களுக்கு என்னை ஞாபகமில்லையா? ஆறு மாதங்களுக்கு முன்னர் இடையூறாக இருக்கிறது என்று சொல்லி என்னிடம் நீங்கள் கொடுத்த கல்தான் இது. உங்கள் பார்வையில் இது தடைக் கல்லாய்த் தெரிந்தது. என் பார்வையில் கடவுளை பொதிந்து வைத்திருக்கும் சிற்பக் கல்லாய்த் தெரிந்தது. நுட்பமாக செதுக்கி எடுத்தேன். கடவுளின் உருவம் அமைத்தேன்" என்றார் சிற்பி. கடைக்காரர் வியந்துபோனார்.

# போலிக் குருவும் பூங்குழலியும்



முன்னொரு காலத்தில் அமரசிம்மன் என்ற அரசருக்கு பூங்குழலி என்ற வளர்ப்பு மகள் இருந்தாள். அவளுக்கு கல்வி கற்க ஒரு நல்ல குருவை ஏற்பாடு செய்யுமாறு அமைச்சர் அறிவுமதிக்கு அரசர் கட்டளையிட்டார். அரசருக்கு பின்னர்தானே அரசனாக வேண்டும் என்ற சிந்தனையில் இருந்தவரே, இந்த அறிவுமதி. தன் எண்ணத் திற்கு இடையூறாக வந்த பூங்குழலி மீது இருந்த பொறாமையால், அவளின் அறிவை மழுங்கடிக்க ஏதேனும் உபாயம் செய்யும் நோக்கில் ஒரு மோசமான குருவை அழைத்துவர எண்ணினான் அறிவுமதி. அவ்வாறே, ஒரு போலிக் குருவை ஏற்பாடு செய்து அழைத்து வந்தார்.

போலிக் குருவோ தாடி, மீசை, ஜடாமுடியுடன், நெற்றியில் விபூதி பூசி, நடுவே குங்குமம் இட்டு, காவி உடை அணிந்து, கையில் கமண்டலம் ஏந்திக் கொண்டு வந்தார். அரசரும் அரசியும் "வாருங்கள் குருவே! இவ்வாசனத்தில் அமர்க!" என்று இருக்கையை காட்டினர். "நீடூழி வாழ்வாயாக மன்னா!" என்று கைதூக்கி அரசரை ஆசீர்வதித்த குரு, கால் மீது காலை போட்டுக் கொண்டு அந்த ஆசனத்தில் அமர்ந்தார்.

"என்னிடம் கல்வி கற்கப் போகும் பெண் யார்?" எனக் கேட்டார் குரு. "நான்தான் குருவே" என்று கூறியபடி, அவர் எதிரே வந்து நின்று வணங்கினாள் பூங்குழலி. "சின்னஞ்சிறிய சிறுமி"என்றார் போலிக் குரு. அதற்கு பூங்குழலி "சின்னஞ் சிறு உளிதானே மலையைப் பிளக்கிறது. கல்லுக்குள் இருந்து சிலையைக் கொண்டு வருகிறது" என்றாள்.

எல்லோரும் பூங்குழலியின் விளக்கத்தைக் கேட்டு வியந்தனர். "உனக்குத்தான் எல்லாம் தெரியும் என்ற எண்ணமா?" என்று மிரட்டும் தொனியுடன் கேட்டார் போலிக் குரு. "இல்லை குருவே! எனக்குத் தெரிந்தது ஒன்றுமில்லை தெரியாதது தான் நிறைய இருக்கிறது" என்று அடக்கத்துடன் கூறினாள் பூங்குழலி.

"தந்தையே! இவரை குருவாக ஏற்றுக்கொள்ள இவரிடம் நான் சில கேள்விகளை கேட்க விரும்புகிறேன். அதற்கு தாங்களும் கற்றோர் நிறைந்த இந்த அவையும் எனக்கு அனுமதியளிக்க வேண்டும்" என்றாள் பூங்குழலி. "கேளம்மா கேள்" என்று அரசரும் அவையோரும் சம்மதித்தனர். தம்மீது சந்தேகம் வரக்கூடாது என்பதற்கு அமைச்சர் அறிவுமதியும் பூங்குழலியின் வேண்டுகோளுக்கு சம்மாதித்தார்.

அதன் பின்னர், குருவை நோக்கி "குருவே! எறும்பு சின்னஞ்சிறு ஜீவன். அதன் உடம்பில் ஒரு பாகம் வாய். அது எறும்பிலும் சிறியது. அந்த வாயைவிட சிறியது எது?" என்று கேட்டாள் பூங்குழலி. "நாக்கு" என்றார் போலிக் குரு.

"இல்லை. அதன் சின்ன வாய் வழியாகச் செல்லும் உணவு" என்றாள் பூங்குழலி. இப்படி அடுக்கடுக்காக போலிக் குருவிடம் பல கேள்விகள் கேட்டாள் பூங்குழலி. எதற்கும் பதில் சொல்லத் தெரியாத போலிக் குரு, தனது வேடத்தைக் களைத்துவிட்டு வெளியே ஓடி விட்டார். தனது திட்டம் பிழைத்துவிட்டதே என எண்ணி தலைகுனித்தார் அமைச்சர். ஆக, பிறரை நம்பிப் பயனில்லை. தன் மகளின் அறிவுக் கூர்மைக்கேற்ற குருவை நானே தேர்ந்தெடுக்கின்றேன் என மகளிடம் வாக்களித்தார் அரசர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BE AWESOME

அங்கர் நியூடேல்

## பயிக் சாம்ப்ஸ்



சந்திரசிறி
வாரியபொல

"அங்கர் நியூடேல் சைக்கிள் எனது கனவை நினைவாக்கியது."



சிரந்த
கொழும்பு

"இந்த அருமையான சைக்கிளை பரிசளித்ததற்கு நன்றி அங்கர் நியூடேல்!"



இம்தியாஸ்
வெல்லாவ

"எனது சொந்த அங்கர் நியூடேல் சைக்கிள். நன்றி அங்கர் நியூடேல்!"

## டப் சாம்ப்ஸ்



யுகேஷன்
அவிஸ்ஸாவள

"அங்கர் நியூடேல் டப் கண்டிப்பாக எனக்கு மிகவும் உதவி புரியும்"



திஷ்னா
கிரிந்த

"இந்த புத்தம் புதிய டபஜ் பரிசளித்ததுக்கு நன்றி அங்கர் நியூடேல்!"



அம்ஹர்
மீனுவாங்கொட

"அங்கர் நியூடேல் டப் பரிசாக கிடைத்ததால் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்"

## அடுத்த சாம்ப் யார்?

தொடர்ந்து எழுத்துகளை சேகரித்து அற்புதமான பரிசுகளை வெல்லுங்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை இரண்டாம் தவணை ஆரம்பமா

இது, பாடசாலைகளில் இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ள காலமாகும். இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக மாணவர்களாகிய நீங்கள் தயாராகி இருப்பீர்கள். அந்தவகையில், கல்விச் செயற்பாடுகளை சிறப்பாக மேற்கொள் வதற்கான வழிமுறைகளை இங்கு பார்ப்போம்.



### முதலாம் தவணைக் கல்விச் செயற்பாடுகள் பூர்த்தியா?

முதலாம் தவணையில் பாடசாலை விளையாட்டுப் போட்டிகள், பாடசாலை சுற்றுலாக்கள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையினால், கல்விச் செயற்பாடுகளை சரிவர முன்னெடுப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டிருக்கக்கூடும். இவ்வாறு தவற விடப்பட்ட பாடங்களையும் இரண்டாம் தவணையில் கற்றுக்கொள்வது அவசியமாகும்.

### இரண்டாம் தவணையை திட்டமிடுங்கள்

பாடங்களைப் படிப்பதற்கு எவ்வளவு நேரத்தினை ஒதுக்க வேண்டும் என்பதனை நீங்கள் தீர்மானித்துக்கொள்வது அவசியமாகும். உங்களது கல்வியின் இலக்கு, தனிப்பட்ட ரீதியிலான கற்கை முறை, கற்கும் தரம் ஆகியவற்றின் அடிப்படையில் நீங்கள் படிக்க வேண்டிய கால அளவை திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

### இலகுவான முறை

அன்றாடம் படிக்கும் பாடங்களை அன்றே படித்து முடிப்பது மிகவும் இலகுவான கற்றல் முறையாகும். பாடசாலையில் கற்பிப்பவற்றை நன்கு அவதானித்தல், அன்றாட வீட்டுப் பாடங்களை அன்றே நிறைவு செய்தல் என்பன கற்கும் பாடங்களை நன்கு நினைவில் வைத்துக்கொள்வதற்கு இலகுவான முறையாகும். இவ்வாறு செய்வதன் மூலம் தவணை முடிவில் நீங்கள் அனைத்து பாடங்களையும் கற்று முடித்திருப்பீர்கள்.

### தேவைக்கு மேலதிகமாக கற்பது அவசியமில்லை

நீங்கள் எந்நேரமும் பாடங்களை படிப்பதனை மட்டும் முழு வேலையாகச் செய்வது பயனற்றது. இதனால், நீங்கள் களைப்படைந்து சோம்பல் உணர்வு ஏற்படும். படித்தவற்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவும் முடியாது போகும். எனவே, படிப்பதை மட்டும் முழு வேலையாகச் செய்யாமல் பிற வேலைகளிலும் கவனம் செலுத்துங்கள்.


### ஆர்வத்துடன் கற்றல்

பாடங்களைப் படிப்பதனை சிலர் வெறுப்புடன் மேற்கொள் வர். இன்னும் சிலர் பரீட்சையில் அதிக மதிப்பெண்களைப் பெறும் நோக்கத்துடன் மட்டும் பாடங்களைப் படிக்கின்றனர். எனினும், பரீட்சையினை இலக்காகக் கொண்டு மட்டும் நாம் படிக்கக் கூடாது. எமது அறிவு வளர்ச்சிக்காகவே படிக்க வேண்டும்.

ஒவ்வொரு நாளும் நாம் படிக்கும் விடயங்கள் நமது வாழ்க்கைக்கு தேவையான புதிய விடயங்களைக் கற்றுத் தருகின்றன. எனவே, உங்களுக்கு கற்பிக்கும் அனைத்து விடயங்களையும் மிகவும் விருப்பத்துடன், நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.


### நேர அட்டவணை தயாரித்தல்

நீங்கள் பாடங்களைக்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...கியுள்ளது...







கற்பதற்கு போதுமான நேரத்தினை ஒதுக்கிக் கொள்வது அவசியமாகும். அதற்கு வினைத்திறனான நேர அட்டவணையை அமைப்பது அவசியமாகும். ஆகவே, உங்களுக்கு கஷ்டமான பாடங்களுக்கு கூடிய நேரத்தையும், இலகுவான பாடங்களுக்கு குறைவான நேரத்தையும்




ஒதுக்கி நேர அட்டவணையை தயார்செய்து அதன்படி கற்றுக்கொள்ளுங்கள்.

## நேர முகாமைத்துவம்

நீங்கள் பாடசாலை நடவடிக்கைகளுடன் தனிப்பட்ட வாழ்க்கையினையும் சமநிலைப்படுத்தியவாறு கற்றலை மேற்கொள்ள வேண்டும். அதாவது, நண்பர்கள், பொழுதுபோக்கு, குடும்ப உறுப்பினர்களுடன் நேரத்தினை செலவிடல் என்பனவும் இதில் உள்ளடங்க வேண்டும்.

நீங்கள் தயாரித்த நேர அட்டவணையை எப்பொழுதும் கண்ணுக்குத் தெரியும் இடத்தில் ஒட்டி வைத்துக் கொள்ளுங்கள். அனைத்து சந்தர்ப்பங்களிலும் நேர அட்டவணைக் கேற்ப பாடங்களை படியுங்கள் சூத்திரங்களை மீண்டும் மீண்டும் பாடமாக்கிக் கொள்ளுங்கள்.

பரீட்சைகளை மனதில் கொண்டு பாடங்களை படிப்பதனை இலக்காகக் கொள்ளுங்கள்.

உங்களுக்கு சோம்பல் ஏற்படும் சந்தர்ப்பங்களில், உங்களுக்கு விருப்பமான பொழுதுபோக்கில் ஈடுபடுங்கள். படிப்பதற்கு ஏற்ற சுற்றாடலை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**கேள்வி:** பிராணிகளால் நிறங்களைப் பார்க்க முடியும் என்பது உண்மையா?



**பதில்:** சில பாலூட்டி விலங்குகள் நிறக்குருடு கொண்டவையாகும். அவற்றால் கறுப்பு, சாம்பல், வெண்மை ஆகிய நிறங்களையே பார்க்க முடியும். மற்ற நிறங்களும் இவ்வாறே தென்படும். எனினும் பெரும்பாலான ஊர்வனங்கள், மீன்கள், பூச்சிகள் மற்றும் பறவைகளுக்கு நிறங்கள் தென்படுகின்றன. குறிப்பாக, வண்ணத்துப்பூச்சிகளினால் சிவப்பு முதல் ஊடுருவும் பல நிறங்களைக் காண முடியும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஏன் எப்படி?

**கேள்வி:** அதிக பயம் போன்ற உணர்வுகள் ஏற்பட்டால், வயிற்றில் அசௌகரியம் உணரப்படுவது ஏன்?

**பதில்:** அதிக பயம், மற்றும் இவ்வாறான வேறு உணர்வுகள் ஏற்படும் போது அட்ரினல் சுரப்பியிலிருந்து அட்ரினல் ஓமோன் சுரந்து இரத்தத்தில் கலந்து விடும். இந்த இரத்தம் தசைகளை நோக்கி வருகின்றது. இதன்போது கல்லீரல் மற்றும் குடலுக்கு வரும் இரத்தம் தசையினால் ஈர்த்து எடுக்கப்படுவதால் உணவுப்பாதையில் இரத்த விநியோகம் குறைந்து, அசௌகரிய தன்மையை உணரமுடிகின்றது.

**கேள்வி:** நீர்நிலையில் இறங்கியதும் கடும் குளிர் உணரப்பட்டாலும் சிறிது நேரத்தில் அந்த தன்மை குறைவதனை உணர முடிவது ஏன்?



**பதில்:** பொதுவாக, எமது உடல் வெப்பநிலை சற்று அதிகமாக இருக்கும். இதனால், நீரில் இறங்கியதும் நீரின் வெப்பநிலை சற்று தாழ்வான வெப்பநிலையை கொண்டிருக்கும்போது அதிக வெப்பம் உள்ள எமது உடலில் இருந்து குறைந்த வெப்பம் உள்ள நீருக்கு வெப்பம் வேகமாகக் கடத்தப்படுகின்றது. இதனாலேயே, உடலில் கடும் குளிர் உணரப்படுகின்றது.

சிறிது நேரத்தில் உடலிலிருந்து வெப்பம் அகன்று விடுகின்றது. இதற்கு காரணம், நீர் குளிர்மையடைந்ததும் சருமத்திற்கு அருகாமையில் பாய்ந்து வந்த இரத்தத்தின் வெப்பநிலை குறைவடைகின்றமையாகும். இதன் போது இரத்தக் குழாயின் இரத்த சுற்றோட்டம் சற்று மந்தமடைகின்றது. இதனால் வெளிப்புற சுற்றாடல் மற்றும் உடலுக்கு இடையிலான வெப்பம் குறைவடைந்து உடலிலிருந்து வெப்பம் வெளியேறும் வேகமும் குறைகின்றமையால், சிறிது நேரத்தில் குளிர் உணர்வும் படிப்படியாகக் குறைவதை நம்மால் உணரமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி-II)

பெயர்: ................................................

01) பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

வானில் சிதறி வீழ்ந்த முத்துக்கள் போல் தோன்றிய நட்சத்திரங்களைவிடப் பூரண சந்திரனே வானில் கண்களைக் கவர்ந்தது. தொலைவில் உள்ள சந்திரனின் கதிர்கள் விழுந்து சமுத்திரத்தை அழகுபடுத்தின. கடலலைகள் கரைநோக்கிவந்து கற்பாறைகளில் மோதி அதிக சத்தத்துடன் மீண்டும் கடலை நோக்கிச் சென்றன. கற்பாறைகளைக் கண்டு கப்பல் விலகிச் சென்றது.

01. மேற்குறித்த பந்தியில் நாளின் எந்தக் காலம் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது?

..........................................................................

02. இங்கு இடம்பெற்றுள்ள உவமானம் யாது?

..........................................................................

03. 'தொலைவில்' என்ற சொல்லின் எதிர்ப்பதம் யாது?

..........................................................................

04. 'சமுத்திரம்' என்ற சொல்லுக்கு ஒத்த சொல் இரண்டு தருக.

..........................................................................

05. கடலலைகள் எதனுடன் மோதுகின்றன?

..........................................................................

06. கப்பல் ஏன் விலகிச் செல்கிறது?

..........................................................................

02) பழமொழிகளின் கருத்தினை எழுதுக.

01. ஆழம் அறியாமல் காலை விடாதே.

..........................................................................

02. ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்.

..........................................................................

03) பின்வரும் வாக்கியங்களை பெண்பாலில் மாற்றி எழுதுக.

01. சிநேகிதன் மட்டும் சென்றான்.

..........................................................................

02. சிறுவன் வீதி வழியே ஓடினான்.

..........................................................................

04) கருத்தை தமிழில் எழுதுக.

01. I am eating fish - ..........................................................

02. Let's sing a song - ........................................................

03. Who is going to the market - ..........................................

05) பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.

01. வற்றாளைக் கிழங்கில் அதிகளவிலுள்ள போஷாக்குப் பொருள் எது?

1. புரதம் 2. மாப்பொருள்
3. இலிப்பிட்டு 4. விற்றமின்




02. கிளைத்துண்டுகளை நடுவதன்மூலம் கன்றுகள் பெறக்கூடிய தாவரம்;

1. கங்குன் 2. பயறு
3. மிளகாய் 4. தக்காளி

03. சோறு சமைப்பதற்காக அரிசியைக் களைவதற்கு மிகப் பொருத்தமான பாத்திரம்;

1. மண் கோப்பை 2. பானை
3. அரிக்கஞ்சட்டி 3. மட்பானை

04. உப்புத் தூள் விரைவாகக் கரையும் நீர்;

1. குளிரூட்டிய நீர் 2. தண்ணீர்
3. கொதித்தாறிய நீர் 4. வெந்நீர்

05. அலுமினியப் பாத்திரத்தில் சமைக்கப்படும் உணவுடன் கலக்கக்கூடாத பொருள்;

1. கறுவா 2. வெள்ளைப்பூண்டு
3. கொறக்காய் 4. கறிவேப்பிலை

06. கண்டமாலை நோய்க்கு பிரதான காரணம் யாது?

1. விற்றமின் குறைபாடு
2. இரும்புச்சத்துக் குறைபாடு
3. கல்சியம் குறைபாடு
4. அயடீன் குறைபாடு

07. ஓர் இதழ் கொண்ட பூ எது?

1. தென்னை 2. மா
3. அந்தூரியம் 4. மிளகாய்

08. நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு உகந்த உணவு யாது?

1. பாண் 2. நூடில்ஸ்
3. கௌப்பி 4. மரவள்ளி

09. 'சிறுவர்' என நாம் கருதும் வயதெல்லை யாது?

1. 10 வயதிற்குட்பட்டவர்
2. 18 வயதிற்குட்பட்டவர்
3. 10 வயதிற்கு மேற்பட்டவர்
4. 14 வயதிற்குட்பட்டவர்

(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)

### முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி-I)

(மே 4 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| 01. 3 | 04. 1 | 07. 3 | 10. 1 | 13. 2 |
| 02. 1 | 05. 2 | 08. 2 | 11. 1 | 14. 3 |
| 03. 2 | 06. 1 | 09. 1 | 12. 1 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கூட்டு ஒலிபரப்பு முறை






ஒலிபரப்புத் துறையில் கூட்டு ஒலிபரப்பு முறை தற்போதைய நவீன வானொலித்துறையில் புதியதோர் அங்கமாக அமைந்துள்ளது. அதாவது, ஒன்றுக்கு மேற்பட்ட வானொலி நிலையங்கள் கூட்டிணைந்து ஒரே அலைவரிசையில் ஒலிபரப்பை மேற்கொள்வதே இந்த முறையாகும். அதாவது, தேசியத்துவம் மிக்க விசேட தினங்கள் அல்லது வணிக ரீதியிலான பொழுதுபோக்கு நிகழ்வுகளை முன்னிட்டதான சிறப்பு நிகழ்வுகள் போன்ற சந்தர்ப்பங்களில் இவ்வாறான கூட்டு ஒலிபரப்புக்கள் நடைபெறுவதுண்டு.

உதாரணத்திற்கு, இரண்டு அல்லது மூன்று வானொலி ஒலிபரப்பு நிலையங்களை எடுத்துக்கொள்வோம். குறிப்பிட்ட ஒரு தேசிய முக்கியத்துவம் மிக்க நிகழ்வொன்று நடைபெறுகின்றதாக வைத்துக்கொள்வோம். இதன்போது, இந்த நிகழ்வுகளை நேரடியாக வர்ணனை செய்யும் போதோ, ஒலிபரப்பை மேற்கொள்ளும்போதோ குறித்த மூன்று வானொலி நிலையங்களினதும் அறிவிப்பாளர்கள் நிகழ்வு நடைபெறும் இடத்திலிருந்தவாறு ஒன்றிணைந்து அறிவிப்புக்களை மேற்கொள்வர். இதன்போது அந்தந்த அலைவரிசைகளுக்கு வெவ்வேறாக ஒலிபரப்புக்கள் பிரிந்து செல்லாமல், ஒரே ஒலி அலைகளிலேயே குறித்த இடத்திலிருந்து ஒலிபரப்பு அலைகள் அவ்வவ் வானொலி நிலையங்களுக்கு செயற்கைக் கோள் ஊடாக அனுப்பப்படும். பின்னர் அங்கிருந்து நேயர்களுக்கு அந்தந்த வானொலி அலைகள் வழியே ஒலிபரப்பு செய்யப்படும்.



இப்படியான சந்தர்ப்பங்களில் எந்தவொரு வகையிலும் குறித்த வானொலி நிலையங்கள் தமது தனித்துவத்தை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பு இருக்காது. ஏனென்றால், ஏனைய வானொலி நிலையத்தின் அறிவிப்பாளரின் குரலும் இதே அலைவரிசையில் ஒலிபரப்பாகும். ஆனால், வானொலி நிலைய அறிவிப்பாளர்களின் அறிவிப்புத் திறன், தனிப்பாணி ஆகியவற்றின்மூலம் ஓரளவிற்கு தனித்துவத்தை உணர்த்த முடியும். இருப்பினும், எந்தவொரு வகையிலும் தனிப்பட்ட ரீதியில் தமது வானொலி நிலையத்தை முன்னிறுத்தி அறிவிப்பு செய்தல் தவிர்க்கப்படும். ஒரு வகையில், குறிப்பிட்ட வானொலி நிலையங்கள் தமது தொழில் ரீதியிலான போட்டியை மறந்து தோழமை உணர்வை வெளிப்படுத்துவதாகவே வெளிக்காட்டப்படும். ஆனால், இப்படியான ஒலிபரப்புக்களை நாட்கணக்கில் நீடிப்பதில்லை. ஒருசில மணிநேர ஒலிபரப்புக்களாகவே நடைபெறுவதுண்டு. அறிவிப்புக்களின் போதுகூட கூட்டிணைந்துள்ள வானொலியின் பெயர்கள், குறியீட்டு இசை ஆகியனவும் ஒலிபரப்புவதற்கான அனுமதிகளை அவை கொண்டிருக்கும். சில சந்தர்ப்பங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளிலான ஒலிபரப்புக்கள்கூட இவ்வாறு கூட்டு ஒலிபரப்பு முறையில் ஒரே அலைவரிசையில் ஒலிபரப்பாகும் சந்தர்ப்பங்களும் உள்ளன.

(தொடரும்)

-ரிஷபன்

# உங்களுக்குத் தெரியுமா?

நீச்சல் தடாகத்தில் நீராடிய பின்னர் கண் சிவந்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கும். இது ஏன் என்று தெரியுமா? நீச்சல் தடாகத்திலுள்ள குளோரின் நீரோடு வினைபுரியும் பெக்டீரியாக்களே இதற்கு காரணமாகும்.





உலகில் ஏற்படும் நிலநடுக்கங்களில் 90 சதவீதமான நிலநடுக்கங்கள், பசுபிக் சமுத்திரத்தின் அருகில் உள்ள வடிநிலப்பகுதிகளை அண்மித்தே இடம்பெறுகின்றன. இப்பகுதியினை 'ரிங் ஒஃப் ஃபயர்' என்றழைக்கின்றனர்.

மத்திய பசுபிக் சமுத்திரத்தில் அமைந்துள்ள ஹவாய் தீவுக்கூட்டத்திற்குரிய ஒரு தீவுதான் நிஹாவ் தீவு. இங்கு 130 பேர் மட்டுமே வசிக்கின்றனர். இவர்களை ஹவாய் பழங்குடியினர் என்றே அழைக்கின்றனர். இவர்கள் எவ்வித அடிப்படை வசதிகளும் இன்றியே இத்தீவில் வாழ்ந்து வருகின்றனர். இதனால், இவர்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் உட்பட, அனைத்தும் வெளியே இருந்து கப்பல் மூலம் எடுத்து வரப்படுகின்றன. அதுமட்டுமன்றி, 1915 ஆம் ஆண்டிலிருந்து இந்த தீவுக்கு வெளியாட்கள் எவரும் அனுமதிக்கப்படுவதில்லை. தனிநபருக்குச் சொந்தமான தீவு என்பதால், இவ்வாறான கட்டுப்பாடுகள் அங்கு காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பம்பரகல விகாரை


கண்டி ராசதானிக் காலத்தில் மன்னனான கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கவின் ஆட்சியின்போது (கி.பி. 1747-1780), பம்பரகல ரஜமகா விகாரை நிறுவப்பட்டதென பண்டைய கால கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விகாரையைச் சுற்றிலும் பாரிய கற்குகைகள் பல உள்ளன. அவற்றில் பௌத்த பிக்குகள் தியானம் செய்து வந்ததாகக் கூறப்படுகின்றது. விகாரையின் உள்ளே ஐந்தடி சயனிக்கும் புத்தர் சிலையும் இரண்டடி சிலையொன்றும் வேறு நான்கு சிலைகளும் காணப்படுகின்றன. விகாரையின் நுழைவாயிலில் மகர தோரணமும் இரு புறங்களிலும் தேவ உருவங்களும் காணப்படுகின்றமை விசேட அம்சமாகும்.

கற்குகையின் உள்ளே காணப்படும் படிக்கட்டுக்கள், கண்டி ராசதானிக் காலத்திற்குரிய கட்டடக் கலையின் வெளிப்பாடுகளாக திகழ்கின்றன.

இங்குள்ள சுவர்களில் சுமார் 58 சுவரோவியங்களைக் காணலாம். அத்தோடு, விகாரையின் உட்பகுதியில் கற்குகையொன்றினுள் ஐந்தடி உயரமான தாகபமொன்று அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலைவனக் குகையில் கை அடையாளங்கள்...!



வாதீ சூரா II குகையிலுள்ள கை அடையாளங்கள்


குகையிலுள்ள சில சுவரோவியங்கள்

தென்மேற்கு எகிப்து, லிபியா ஆகியவற்றின் எல்லையில் 'வாதீ சூரா II' எனும் குகை அமைந்துள்ளது. இது சஹாரா பாலைவனத்திற்கு சொந்தமான பிரதேசமாகும். வாதீ சூரா என்பதன் அர்த்தம் 'மிருகங்களின் குகை' என்பதாகும். இந்த குகைச் சுவர்களில் ஆதிமனிதனால் வரையப்பட்டதாகக் கருதப்படுகின்ற 5,000 சுவரோவியங்களைக் காணக்கூடியதாக உள்ளது. அந்த ஓவியங்களுக்கிடையில் கை அடையாளங்கள் பலவும் காணப்படுகின்றன. இவை சிறு பிள்ளைகளின் கை அடையாளங்களாக இருக்கலாம் என முன்னர் கருதப்பட்டு வந்தது. எனினும், அண்மையில் வெளியான தகவல்களின்படி, அவை சிறு பிள்ளைகளின் கை அடையாளங்கள் அல்ல என்றும், அப்பிரதேசத்தில் வாழும் பாலைவன பல்லிகளின் முன்னங்கால் சுவடுகளாகவோ அல்லது முதலைக் குட்டிகளின் பாதச் சுவடுகளாகவோ இருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது.

## வாதீ சூரா II கண்டுபிடிப்பு

சஹாரா பாலைவனப் பிரதேசத்தில் ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்ட தொல்பொருள் பயிலுனர் ஆய்வுக் குழு ஒன்றே இந்தக் குகையைக் கண்டுபிடித்தது. இந்த கண்டுபிடிப்பு 2002 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. 2010 ஆம் ஆண்டளவில் இக்குகை மென்மேலும் ஆய்வுக் குட்படுத்தப்பட்டது. இந்த குகையானது, 17 மீற்றர் நீளமும் 7 மீற்றர் உயரமும் கொண்டது. ஆதிமனிதனால் வேட்டையாடப்பட்ட பல்வேறு விலங்குகளின் உருவங்களையும் இங்கு காணக்கூடியதாக உள்ளது. இவை சுமார் 8000 ஆண்டுகளுக்கு முன்னர் வரையப்பட்டிருக்கலாம் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். கால ஓட்டத்தால் இன்றளவில் சில அழிந்த நிலையில் காணப்படுகின்றன.


வாதீ சூரா குகைப்பகுதி


உங்கள் அபிமான

தமிழ் Mirror

திங்கள் முதல் வெள்ளிவரை

விலை Rs. 10/=

தினசரி தேசிய பத்திரிகையாக வெளிவருகிறது

wijeyanewspapers helping shape opinions

the SUNDAY TIMES

விஜய்

DailyMirror


தமிழ் Mirror www.tamilmirror.lk

விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதர்களுக்கு உதவும் வளர்ப்பு

**பிராணிகளுக்கும் மனிதர்களுக்குமிடையே பண்டைய காலம்தொட்டு தொடர்புகள் இருந்து வருகின்றன. இதன் அடிப்படையிலேயே, மனிதர்கள் பிராணிகளை வளர்க்க முற்பட்டனர். மனிதனின் பல்வேறுபட்ட தேவைகளை நிறைவு செய்துகொள்வதற்கு இந்த வளர்ப்புப் பிராணிகள் பல்வேறு வழிகளில் பயன்பட்டு வருகின்றன. எனினும், பிராணிகளை வளர்க்கும் முறைகள் ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுகின்றது. அவ்வாறே, ஒவ்வொரு பிராணியும் ஒவ்வொரு தேவைக்காகவே வளர்க்கப்படுகின்றது.**



## பிராணிகளைக் கட்டுப்படுத்தல் என்பது யாது?

காட்டில் வாழும் பிராணிகளுக்கும் மனிதனுக்குமிடையே பாரிய இடைவெளி காணப்படுகின்றது. இந்த இடைவெளியைக் குறைத்து, தொடர்பினை ஏற்படுத்திக் கொள்வதற்கான ஒரு வழிமுறையாகவே பிராணிகள் வளர்ப்பு முறை உள்ளது.பிராணிகளை வளர்ப்பதன் மூலம் அவற்றை தமது தேவைகளுக்கேற்ப கட்டுப்படுத்தி, வழிப்படுத்திக்கொள்ள முடியும். இதற்கமைய, காலத்திற்குக் காலம் உலகின் பல்வேறு பகுதிகளில் பிராணிகளைக் கட்டுப்படுத்தி, அவற்றை வளர்ப்புப் பிராணிகளாக மாற்றிக்கொள்ளும் நிகழ்வுகள் இடம்பெற்றன.


## வரலாறு

**வேட்டை யுகம்:** இக்காலத்தில் ஆதி மனிதன் உணவுத் தேவைக்காக பிராணிகளை வேட்டையாடினான். பிராணிகளை வேட்டையாடுவதற்காக அவன் முதலில் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்த பிராணி நாய் ஆகும். இதற்குக் காரணம், தாம் வேட்டைக்குச் செல்லும்போது, தமக்கு உதவக் கூடிய ஆற்றலும் திறமையும் நாய்களிடம் காணப்பட்டமை ஆகும்.

**இடையர் யுகம்:** உணவு தொடர்பாக, மனிதனுக்கு பிரச்சினைகள் ஏற்பட்ட காலம் இதுவாகும். சனத்தொகை அதிகரிப்பிற்கு ஏற்ப, உணவுத் தேவையைப் பூர்த்திசெய்துகொள்ள முடியாமல் போனதால், உணவுத் தேவைக்காக மனிதன் பிராணிகளை வளர்க்கத் தொடங்கினான். அதற்கமைய, பாலைப் பெறக்கூடிய விலங்குகள் வளர்க்கப்படலாயின.

**உதாரணம்:** ஆடு, பசு, செம்மறியாடு.

**வேளாண்மை யுகம்:** பல வழிகளிலும் மனிதன் முன்னேற்றம் காணத் தொடங்கிய இந்த யுகத்தில், அவன் மேலும் சிறப்பாக வாழ்வதற்கு பிராணிகளின் ஒத்துழைப்பு தேவைப்பட்டது. இதற்குப் பலம்வாய்ந்த பிராணிகளே உதவக்கூடியதாக இருந்தன. அதற்கமைய, இந்த பிராணிகள் பாரமான பொருட்களைத் தூக்குவதற்கும் பொதிகளை சுமப்பதற்கும் பயன்பட்டன.



**உதாரணம்:** யானை, கழுதை.

அத்துடன், விவசாய நடவடிக்கைகள் நிறைவடைந்து ஓய்வு நேரத்தைக் கழிக்கவும் பொழுதுபோக்கிற்காகவும் சில பிராணிகள் வளர்க்கப்பட்டன.

**உதாரணம்:** பூனை.

இவை தவிர, அக்காலத்தில் கோத்திரங்களுக்கு இடையிலான மோதல்கள், யுத்தங்கள் நடைபெறும்போது அதற்கு உதவக் கூடியவாறான பிராணிகளும் வளர்க்கப்படலாயின.

**உதாரணம்:** குதிரை, யானை.

**நவீன யுகம்:** இந்த யுகத்தில் மனிதன் வேகமாகவும் அதிகமாகவும் இயங்கவேண்டிய தேவை ஏற்பட்டது. இதனால், மனிதனின் ஓய்வுநேரம் குறைவடைந்ததோடு, உடல் களைப்பு, மன உளைச்சல்களுக்கு ஆளாகும் நிலை ஏற்பட்டது. இத்தகைய உடல்-உள பாதிப்புகளிலிருந்து விடுபட்டு, இயல்பு வாழ்க்கையை அனுபவிக்கும் பொருட்டு செல்லப் பிராணிகளை வளர்க்கத் தொடங்கினான்.

**உதாரணம்:** முயல், பூனை, கிளி, நாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...புப் பிராணிகள்





### பிராணிகள் வளர்க்கப்பட்ட விதம்

ஆரம்பகாலத்தில் பிராணிகளை, வளர்ப்புப் பிராணிகளாக தமது கட்டுப்பட்டின்கீழ் கொண்டு வருவதற்கு அவற்றை பயமுறுத்துதல், தாக்குதல் போன்ற முறைகள் பின்பற்றப் பட்டன. இந்த தாக்குதலுக்குப் பயந்த பிராணிகள் மனிதருக்கு கட்டுப்பட்டு நடந்தன. பிற்காலத்தில் மனிதன் கடுமையான வழிகளில் பிராணிகளைக் கட்டுப்படுத்தும் முறைகளைக் கைவிட்டு; பிராணிகளுக்கு அன்பு காட்டுதல், உணவளித்தல், அரவணைத்தல், ஓய்வு கொடுத்தல் போன்ற முறைகளைக் கடைப்பிடித்தான்.

### பிராணிகளை கட்டுப்படுத்திய முறைகள்

★ மொழி மூலம் - யானை

★ சொற்கள் மூலம் - மாடு, நாய், மைனா, குதிரை, கிளி

★ சொற்கள் மற்றும் அரவணைப்பு மூலம் - பூனை, அணில், முயல்

### வளர்ப்புப் பிராணிகளின் இயல்புகள்

★ மனிதனுக்கு கட்டுப்பட்டு மனிதனின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்பட்டு செயற்படுதல். **உதாரணம்:** யானை, மாடு.

★ கட்டளைக்கு ஏற்ப செயற்படுதல். **உதாரணம்:** யானை, நாய்.

★ கவரும் தன்மை மற்றும் அலங்காரத் தோற்றம் கொண்டிருத்தல். **உதாரணம்:** கோல்ட் ஃபிஷ், கிளி.

★ சுறுசுறுப்பு மற்றும் விரைவாக செயற்பட்டு மனிதனது வேலைகளுக்கு உதவுதல். **உதாரணம்:** குதிரை, மாடு.

★ மனிதனின் பொழுதுபோக்கிற்காகவும் மகிழ்ச்சிக்காகவும் வளர்க்கப்படல். **உதாரணம்:** பூனை, முயல்.

★ மனிதனுக்கு நண்பனாகவும் நன்றியுள்ளதாகவும் செயற்படல். **உதாரணம்:** நாய், பூனை.

### பண்டைய காலத்திலிருந்து மனிதனால் வளர்க்கப்பட்டு வரும் பிராணிகள் சில...

| பிராணி | வளர்க்க ஆரம்பித்த காலம் | வளர்க்கப்பட்ட பிரதேசம் | பெறப்பட்ட பயன்பாடு |
|---|---|---|---|
| நாய் | கி.மு. 30,000-15,000 | யுரேசியா (ஐரோப்பா, ஆசியா) | இறைச்சி, நெருக்கம், பாதுகாப்பு |
| செம்மறியாடு | கி.மு. 11000-9000 | தென்மேல் ஆசியா | கம்பளி, இறைச்சி, பால், தோல் |
| பன்றி | கி.மு. 9000 | சீனா | இறைச்சி, தோல், நெருக்கம் |
| ஆடு | கி.மு. 8000 | ஈரான் | பால், இறைச்சி, தோல் |
| மாடு | கி.மு. 8000 | இந்தியா, வட ஆபிரிக்கா | இறைச்சி, பால், சக்தி, தோல், போக்குவரத்து, பசளை |
| பூனை | கி.மு.7500 | கிழக்காசியா | நெருக்கம், சேதம் விளைவிக்கும் உயிரினங்களிடம் இருந்து பாதுகாப்பு |
| கோழி | கி.மு. 6000 | இந்தியா, தென்கிழ் ஆசியா | இறைச்சி, முட்டை, இறகு, நெருக்கம் |
| கினிபிக் | கி.மு. 5000 | பெரு | இறைச்சி, நெருக்கம் |
| கழுதை | கி.மு. 5000 | எகிப்து | போக்குவரத்து, சக்தி |
| தாரா | கி.மு.4000 | சீனா | இறைச்சி, கொழுப்பு, இறகு, முட்டை |
| எருமை | கி.மு. 4000 | இந்தியா, சீனா | சக்தி, பால் |
| தேனீ | கி.மு. 4000 | உறுதியாக கூறமுடியாது | தேனீ, மெழுகு |
| குதிரை | கி.மு. 4000 | யுரேசிய புல்வெளி | சக்தி, போக்குவரத்து |
| ஒட்டகம் | கி.மு. 4000 | அரபு தேசம் | போக்குவரத்து, சக்தி, பால், இறைச்சி |
| பட்டுப்பூச்சி (பட்டுப்புழு) | கி.மு. 3000 | சீனா | பட்டு நூல் |
| துருவ மான் | கி.மு. 3000 | ரஷ்யா | இறைச்சி, பால், கொம்பு, போக்குவரத்து |
| புறா | கி.மு. 3000 | மத்திய தரைக் கடல் பிரதேசம் | காட்சிக்காக, செய்திப் பரிமாற்றம் |
| யெக் மாடு | கி.மு. 2500 | திபெத் | பால், போக்குவரத்து, தோல், சக்தி |
| லாமா | கி.மு. 2400 | பெரு | பால், போக்குவரத்து, கம்பளி, இறைச்சி |
| தீக்கோழி | கி.மு. 2000 | ஆபிரிக்கா | இறைச்சி, முட்டை, இறகு |
| ஆசிய யானை | கி.மு. 2000 | ஆசியா | சக்தி, போக்குவரத்து, யானைத் தந்தம் |
| ஜாவா சிட்டுக்குருவி | கி.மு. 2000 | சீனா | நெருக்கம் |
| எலி | கி.மு. 1100 | சீனா | நெருக்கம், ஆய்வுகள் |
| மான் | கி.மு. 1000 | மத்தியதரைக் கடல் பிரதேசம் | இறைச்சி, கொம்பு, தோல் |
| இந்திய மயில் | கி.மு. 500 | இந்தியா | காட்சி, இறகு (தோகை) |
| கிளி | கி.மு. 300 | உறுதியற்றது | நெருக்கம், காட்சி, பேச்சு |
| மலைப்பாம்பு | 1960 இற்குப் பின் | ஆபிரிக்கா | நெருக்கம் |
| ரியா பறவை | 20 ஆம் நூற்றாண்டு | தென் அமெரிக்கா | இறைச்சி, முட்டை, இறகு, கொழுப்பு |
| மரகதப் புறா | நிச்சயமற்றது | அவுஸ்திரேலியா | நெருக்கம் |
| பச்சை நிற உடும்பு | 1990 இற்குப் பின் | தென் அமெரிக்கா | நெருக்கம் |
| மெண்டரின் வாத்து | நிச்சயமற்றது | சீனா | இறைச்சி, கொழுப்பு |
| மைனா | நிச்சயமற்றது | இந்தியா, அவுஸ்திரேலியா | நெருக்கம், பேச்சு (குரல்) |
| கோல்ட்ஃபிஷ் | நிச்சயமற்றது | சீனா | நெருக்கம் |
| முயல் | நிச்சயமற்றது | ஐரோப்பா | இறைச்சி, நெருக்கம் |


- இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபஞ்சத்தின் மிகப் பெரிய துடிப்பண்டக் கட்டமைப்பு



ஓவியக் கலைஞர் ஒருவரால் வரையப்பட்ட ULAS J1120+0641 என பெயரிடப்பட்டுள்ள துடிப்பண்டத்தின் படமே இது. மிகவும் தொலைவில் அமைந்துள்ள துடிப்பண்டமாக இது கருதப்படுகின்றது.



இதுவே எமது பால்வீதி நட்சத்திர மண்டலம் ஆகும். எமது நட்சத்திர மண்டலத்திற்கும் அதன் அருகில் இருக்கும் எண்ட்ரோமீடா நட்சத்திர மண்டலத்திற்கும் இடையிலுள்ள தூரம் 2.5 மில்லியன் ஒளியாண்டுகளாகும்.

*பிரபஞ்சத்தின் மிகப் பெரிய துடிப்பண்டக் கட்டமைப்பை (The largest quasar group - LQG) பிரித்தானிய வானவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்த துடிப்பண்டக் கட்டமைப்பு எந்தளவுக்கு விசாலம் எனின், இதன் ஓர் எல்லையிலிருந்து மறு எல்லையை சென்றடைய, விண்கலத்தில் பயணித்தாலும் 4 பில்லியன் ஒளியாண்டுகள் எடுக்கும் எனக் கூறப்படுகின்றது.*


## விசாலமானது

பால்வீதி என அழைக்கப்படும் எமது நட்சத்திர மண்டலத்திலிருந்து எமக்கு மிகவும் அருகில் உள்ள எண்ட்ரோமீடா நட்சத்திர மண்டலத்திற்கிடையே உள்ள தூரம் **2.5** மில்லியன் ஒளியாண்டுகளாகும். பிரபஞ்சத்திலுள்ள அனைத்து நட்சத்திர மண்டலத் தொகுதிகளின் விசாலம் சுமார் **6-10** மில்லியன் ஒளியாண்டுகளாக இருக்கும். எனினும், தற்போதளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மிகப் பெரிய துடிப் பண்டக் கட்டமைப்பின் அகலம் **1.6** பில்லியன் ஒளியாண்டு களிலும் அதிகமாகும் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

## கண்டுபிடிப்பு

இங்கிலாந்தின் மத்திய லெங்கெஷயர் பல்கலைக்கழகத்தின் இணை நிறுவனமான ஜெரமியா ஹொரொக்ஸ் வானவியல் நிறுவனத்தைச் சேர்ந்த கலாநிதி ரொஜர் க்லொவ்ஸ் என்பவரின் தலைமையிலான விஞ்ஞானிகள் குழுவே இந்த கண்டுபிடிப்பை மேற்கொண்டுள்ளனர். ஹவாய் தீவில் நிறுவப்பட்டுள்ள ஐக்கிய அமெரிக்காவுக்கு சொந்தமான அதிசக்தி வாய்ந்த அகச்சிவப்புக் கதிர் தொலைநோக்கியைப் பயன்படுத்தியே இந்த பாரிய துடிப்பண்டம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தமது கண்டுபிடிப்பு பற்றி க்லொவ்ஸ் கருத்து வெளியிடும் போது, "பிரபஞ்சத்தில் உள்ள மிகப்பெரிய கட்டமைப்பு இதுவா கும் என எம்மால் உறுதியாகக் கூறமுடியும். இந்த துடிப்பண்டங் கள் ஒரு கட்டமைப்பாகவோ அல்லது குவியலாகவோ இருக்கும் என்பதை நாம் அறிந்து வைத்திருந்தோம். எனினும், அது இந்தள விற்கு விசாலமான கட்டமைப்பாக இருக்கும் என நாம் எண்ணி யிருக்கவில்லை" என்றார்.




73 துடிப்பண்டங்களைக் கொண்ட இந்த விசாலமான கட்டமைப்பா னது, வானில் பரவி இருக்கும் விதமே இங்கு காட்டப்படுகின்றது.

## துடிப்பண்டம் என்றால்...

வானில் உள்ள நட்சத்திரங்களில் பெரும்பாலானவை ஆற்றலை இழந்து அழியும்போது, அதி பிரகாசமாக வெடித்துச் சிதறும். இதைத்தான் 'சுப்பர்நோவா' என்பார்கள். இதிலிருந்து மிக அதிக நேரம் காமாக் கதிர்கள் வெளியாகும். இந்தக் கதிர்கள் தம்மைச் சுற்றியுள்ள பிற ஆற்றல்களையும் இணைத்து பாரிய வெடிப்புக் குள்ளாகும். இந்நிகழ்வே 'ஹைப்பர்நோவா' எனப்படுகின்றது. ஹைப்பர்நோவாவிற்குப் பின்னர், தொடர் வினைகள் ஏற்படும் போது, நிறைகுறைந்த ஹைட்ரஜன், ஹீலியம், லித்தியம் ஆகியவை இணைந்து பாரிய ஒளிப்புதர்களை உருவாக்குகின்றன. இந்த பாரிய ஒளிப்புதர்களில் இருந்து வெளிப்படும் பிரமாண்டமான ஒளிவெள்ளம் கொண்ட பொருள்தான் 'துடிப்பண்டம்' எனப்படுகின்றது. 'துடிப்பண்டம்' அல்லது 'துடிப்புத்திரள்' (quasar) என்பது, விண்வெளியில் அமைந்திருக்கும் ஒளி உட்பட, வானலை மின்காந்த ஆற்றலை உமிழும் விசாலமான கட்டமைப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகரத்திலும் கிராமத்திலும் சுத்தம் பேணுவோம்

இலங்கையில் அதிகரித்துவரும் சனத் தொகை காரணமாகவும், நகரமயமாக்கல் காரணமாகவும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சுற்றாடல், சுகாதாரப் பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன. இவற்றுள்,நகரங்கள் மற்றும் கிராமப் பகுதிகளில் சேரும் குப்பைகளை அகற்றுவது தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினையை பிரதானமாகக் குறிப்பிடலாம்.

குப்பைகள் முறையாக அகற்றப்படாமல் இருக்கும்போது, அங்கு துர்நாற்றம் வீசுதல், ஈக்கள் மற்றும் நுளம்புகள் பெருக்கம், நீர்நிலைகள் அசுத்தமடைதல், ஆங்காங்கே நீர் தேங்குதல் போன்ற பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

இதனால், அப்பகுதிகளில் வாழும் மக்களும் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படுகின்றது. குறிப்பாக, தொற்று நோய்கள் மற்றும் தொற்றாத நோய்களின் பாதிப்புகளுக்கு மக்கள் ஆளாக நேரிடுகின்றது.

அசுத்தமான சுற்றாடலிலேயே மலேரியா, டெங்கு போன்ற நோய்கள் தீவிரமாகப் பரவும் நிலை காணப்படுகின்றது. ஆகவே, நீங்கள் வாழும் பகுதியை சுத்தமாக வைத்திருக்கவும் அழகுபடுத்தவும் உங்களால் இயன்ற பங்களிப்பினை வழங்குங்கள்.



குடும்ப அங்கத்தவர்கள் நண்பர்கள், உறவினர்கள், அயலவர்கள் போன்றோரையும் இது குறித்து தெளிவுபடுத்துங்கள். உங்கள் கிராமத்தில் அல்லது நகரத்தில் உள்ளவர்களுடன் இணைந்து உங்கள் பகுதிகளில் சுற்றாடல் பாதுகாப்புத் திட்டங்கள், விழிப்புணர்வு செயற்பாடுகள், சிரமதானப் பணிகள் மற்றும் பசுமை வேலைத்திட்டங்களை ஆரம்பியுங்கள். இவற்றின் மூலம் கிராமத்திலும் நகரத்திலும் சுத்தத்தைப் பேணக்கூடியதாக இருக்கும் என்பதோடு, ஆரோக்கியமாக வாழக் கூடிய சுற்றாடலையும் அமைத்துக்கொள்ளலாம்.







## ஹீன் போவிட்டியா



- ★ விஞ்ஞானப் பெயர்: *Osbeckia octandra*
- ★ ஆங்கிலப் பெயர்: Eight Stamen Osbeckia

கிளைகள் பிரிந்து புதராக வளரக்கூடிய பன்முகத் தன்மை கொண்ட தாவரமாகும். இதன் கிளைகள் பலவீனமானவை. இலைகள் சற்று சொற சொறப்பாகக் காணப்படும். செந்நிறத் தண்டுகளைக் கொண்ட இத்தாவரத்தின் பூக்கள், ஊதா நிறமானவை.



இதன் இலைகளும் மெல்லிய தண்டுகளும் உணவாகப் பயன்படுகின்றன. இலங்கைக்கே உரிய இந்த தாவர இனம், இலங்கையின் ஈர வலயம் மற்றும் உலர்வலயப் பகுதிகளில் 2 முதல் 4 அடி வரை புதராக வளரும்.பாரம்பரிய மருத்துவத்தில் இது முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இதன் இலைகள், பட்டை, வேர்கள் என்பன நீரிழிவு, மூலநோய், கல்லீரல் நோய்கள், மஞ்சள் காமாலை, இரத்தத்தில் கொலஸ்ட்ரோல் அதிகரிப்பு போன்ற நோய்களுக்கு மருந்தாக பயன்படுத்தப்படுகின்றன. புற்றுநோயைக் குணப்படுத்தும் ஆற்றலும் இத்தாவரத் திற்கு உண்டு. இலங்கையில் தென் மாகாணத்திற்குரிய தேசிய மலராக ஹீன் போவிட்டியா பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන்
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் அக்கா- தம்பி ஆகியோருக்கு இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.

අක්කා: මල්ලි, හවස කොහේ හරි යනවාද?
மல்லி, ஹவச கொஹே ஹரி யனவாத?
அக்கா: தம்பி, பின்னேரம் எங்கேயாவது போகிறீரா?

මල්ලි: ඇයි අක්කේ? මොනව හරි වැඩක් ද?
எய் அக்கே? மொனவ ஹரி வெடக் த?
தம்பி: ஏன் அக்கா? ஏதாவது வேலையா?

අක්කා: ඔව් මල්ලි. හවස මිදුල ශුද්ධ කරන්න ඕනේ.
ஒவ் மல்லி. ஹவச மிதுல சுத்த கரன்ன ஓனே.
அக்கா: ஆம் தம்பி. பின்னேரம் முற்றத்தை சுத்தம் செய்யவேண்டும்.

මල්ලි: හොඳයි අක්කේ.
ஹொந்தய் அக்கே.
தம்பி: நல்லது அக்கா.

பின்னேரம்...

මල්ලි: අක්කේ, දැන් මොනවද කරන්න ඕනේ?
அக்கே, தென் மொனவத கரன்ன ஓனே?
தம்பி: அக்கா, இப்போது என்ன செய்ய வேண்டும்?

අක්කා: ඔයා මේ පැත්තේ තියෙන තණ කොළ කපන්න.
ஒயா மே பெத்தே தியென தண கொள கபன்ன.
அக்கா: நீங்கள் இந்தப் பக்கத்திலுள்ள புற்களை வெட்டுங்கள்.

මම මල් පැලවලට පෝර දාලා වතුර දාන්නම්.
மம மல் பெலவலட்ட போர தாலா வத்துர தான்னம்.
நான் பூஞ்செடிகளுக்கு பசளையிட்டு நீர் பாய்ச்சுகின்றேன்.

මල්ලි: අක්කේ, ඔයා මේ අඹ ගහ යට අතු ගාන්න.
அக்கே, ஒயா மே அம்ப கஹ யட்ட அத்து கான்ன.
தம்பி: அக்கா, நீங்கள் இந்த மாமரத்தின் கீழே பெருக்குங்கள்.

අක්කා: හරි මල්ලි. අපි මල් පෝච්චි ටික මේ පැත්තෙන් තියමු.
ஹரி மல்லி. அப்பி மல் போச்சி டிக்க மே பெத்தென் தியமு.
அக்கா: சரி தம்பி. நாங்கள் பூச்சாடிகளை இந்தப் பக்கத்தில் வைப்போம்.

මල්ලි: දැන් මිදුල ලස්සනයි නේද අක්කේ?
தென் மிதுல லஸ்ஸனய் நேத அக்கே?
தம்பி: இப்போது முற்றம் அழகாக இருக்கிறது தானே அக்கா?

අක්කා: ඔව් මල්ලි.
මිදුල හරි ලස්සනයි.
ஒவ் மல்லி.
மிதுல ஹரி லஸ்ஸனய்.
அக்கா: ஆம் தம்பி.
முற்றம் நல்ல அழகு.



**பயிற்சி**

**இடைவெளிகளை நிரப்புக.**

1. කොහේ හරි ...............?
2. මිදුල ............. කරන්න ඕනේ.
3. ............... කොළ කපන්න.
4. ............... හරි ලස්සනයි.




★ **Will** சகிதம் மூல வினைச்சொல்லைக் (Stem Verb) கையாண்டு அமைக்கப்படுகின்ற எதிர்கால 'வினா நிலை' வாக்கியங்கள் மற்றும் **'going to'** சகிதம் மூல வினைச்சொல்லைக் கையாண்டு அமைக்கப் படுகின்ற எதிர்கால 'வினா நிலை' வாக்கியங்கள் ஆகியவற்றுடன் **What, Where, When, How** முதலான வினாச்சொற்களைக் கையாளும்போது, அந்த வாக்கியங்கள் எவ்வாறு அமைகின்றன என்பதை மேலும் இங்கே அவதானிப்போம்.

அ) Where will you meet the principal?
நீ அதிபரை எங்கே சந்திப்பாய்?

ஆ) Where are you going to meet the principal?
நீ அதிபரை எங்கே சந்திக்கப் போகின்றாய்?

★ Where will you meet him?
நீ அவரை எங்கே சந்திப்பாய்?

★ Where are you going to meet him?
நீ அவரை எங்கே சந்திக்கப் போகின்றாய்?

★—★—★—★

இ) How will you inform the message?
நீ எவ்வாறு அந்த தகவலை தெரிவிப்பாய்?

ஈ) How are you going to inform the message?
நீ எவ்வாறு அந்தத் தகவலை தெரிவிக்கப் போகின்றாய்?

★ How will you inform him?
நீ அவருக்கு எவ்வாறு தெரிவிப்பாய்?

★ How are you going to inform him?
நீ அவருக்கு எவ்வாறு தெரிவிக்கப் போகின்றாய்?

★—★—★—★

உ) How will you open the door?
நீ எவ்வாறு அந்த கதவைத் திறப்பாய்?

ஊ) How are you going to open the door?
நீ எவ்வாறு அந்தக் கதவைத் திறக்கப் போகின்றாய்?

★ How will you open it?
நீ அதை எவ்வாறு திறப்பாய்?

★ How are you going to open it?
நீ அதை எவ்வாறு திறக்கப் போகின்றாய்?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய விளையாட்டுப் போட்டிகள் இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறும்

இந்த வருடம் நடைபெறவுள்ள 42 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் புதிதாக 10 போட்டிகளை சேர்த்துக்கொள்வதற்கு விளையாட்டுத்துறை அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அத்துடன், கிளிநொச்சி நகரில் நடத்துவதாக ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்த மேற்படி தேசிய விளையாட்டுப் போட்டியினை யாழ்ப்பாண நகரில் நடத்துவதற்கு தீர்மானித்திருப்பதாகவும் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் ஐ.பி. விஜேரத்ன தெரிவித்துள்ளார். இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள அவர், தாம் கிளிநொச்சி நகரிலேயே இம்முறை விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு உத்தேசித்திருந்தபோதிலும் தற்போது யாழ்ப்பாணத்தில் இப்போட்டியை நடத்துவதற்கு தீர்மானித்திருப்பதாகவும், அதற்கு ஏற்றதான விளையாட்டு அரங்கை தற்போது தேடி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.




மேற்படி தேசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் திகதி இன்னமும் தீர்மானிக்கப் படாதபோதிலும் அநேகமாக, செப்டெம்பர் மாதம் இரண்டாம் வாரத்தில் நடத்துவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவும் தெரிய வருகின்றது. மேலும், இதுவரை தேசிய விளையாட்டுப்போட்டிகளில் 20 போட்டிகளே நடைபெற்று வந்தபோதிலும் இம்முறை ரக்பி, கெரம், செஸ், கைப்பந்தாட்டம், கயிறு இழுத்தல், வூஷு, கடற்கரை கபடி, ஸ்டேன்டர் ட் சைக்கிள் ஓட்டப் போட்டி, பிலியட், மகளிர் பொக்சிங் ஆகிய 10 போட்டிகள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## எலன் டொனால்ட் ஆஸியின் பந்துவீச்சு பயிற்றுனராக நியமனம்




இலங்கையுடன் போட்டியிடவுள்ள அவுஸ்திரேலிய அணியின் பந்து வீச்சுப் பயிற்றுனராக தென்னாபிரிக்க அணியின் முன்னாள் பந்துவீச்சாளர் எலன் டொனால்ட் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார். இதன்படி எதிர்வரும் ஜூலை மாதம் டொனால்ட் அவுஸ்திரேலிய அணியுடன் இணையவுள்ளார்.

2015 ஆம் வருடத்தில் தென்னாபிரிக்க அணியின் பந்துவீச்சுப் பயிற்றுனராக பணியாற்றிய டொனால்ட்டின் ஒப்பந்த காலம் நீடிக்கப்படாமையின் காரணமாகவே, அவர் அவுஸ்திரேலிய அணியுடன் இணைந்துகொள்ளத் தீர்மானித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## இலங்கை அணியில் ஏழு வேகப் பந்து வீச்சாளர்கள்

இலங்கை-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டிகள் இங்கிலாந்தில் நடைபெற்று வருகின்றன. இப்போட்டிகளையொட்டி இலங்கை அணியில் வேகப்பந்து வீச்சாளர்கள் 6 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். அணியின் தலைவர் மெத்யூஸையும் சேர்த்தால் வேகப்பந்து வீச்சாளர்களின் எண்ணிக்கை 7 ஆக அமைகின்றது.




மேற்படி போட்டிகள் நடைபெறுகின்ற மே, ஜூன் மாதங்களில் இங்கிலாந்தின் காலநிலை மற்றும் மைதான ஆடுகளத்தில் பந்து எறியும் நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டே வேகப்பந்து வீச்சாளர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை, தற்போது நடைபெற்று வருகின்ற 19 வயதிற்கு கீழானோருக்கான அகில இலங்கை ரீதியிலான மாகாண மட்டப் போட்டிகளில் சிறந்த திறமையைக் காட்டும் வீரர் ஒருவருக்கு மேற்படி இங்கிலாந்து போட்டியில் இலங்கை அணி சார்பில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படும் என்று இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபால முன்னர் தெரிவித்திருந்தமைக்கு அமைய, அத்தகையதொரு வாய்ப்பு வழங்கப்படுமா என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

## 2020 ஒலிம்பிக் இலச்சினையின் உத்தியோகபூர்வ வெளியீடு

2020 ஆம் ஆண்டில் ஜப்பானின் டோக்கியோ நகரில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் மற்றும் பெராலிம்பிக் (மாற்றுத் திறனாளிகளுக்கானது) போட்டிகளுக்கான உத்தியோகபூர்வ இலச்சினை வெளியிடப்பட்டுள்ளது.

பொருத்தமான இலச்சினையை அறிமுகப்படுத்துவதற்காக, ஜப்பானில் 18 வயதிற்கு மேற்பட்டோருக்கிடையே ஒலிம்பிக் இலச்சினைப் போட்டியொன்று நடத்தப்பட்டது. 15,000 இற்கும் மேற்பட்டோர் தமது கற்பனையில் வரைந்த இலச்சினைகளை முன்வைத்த போதிலும், இவற்றுள் குறைந்த வர்ணக் கலவைகளைக் கொண்ட இலச்சினையே வெற்றிபெற்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.




46 வயதுடைய அசாவூ டொகாலோ என்பவர் வரைந்த இலச்சினையே இவ்வாறு வெற்றிக்குரிய ஒலிம்பிக் இலச்சினையாக தெரிவாகியுள்ளது. வெள்ளை மற்றும் இள நீல நிறத்தைக் கொண்டு இவர் இந்த இலச்சினையை வரைந்திருந்தார். வெற்றியாளரான டொகாலோ ஜப்பான் சோக்கேய் பல்கலைக்கழகப் பட்டதாரி என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் அற்புதக் குகைகள்

உலகம் முழுவதும் புதுமையான பல குகைகள் உள்ளன. அவ்வாறான குகைகள் உருவாவதற்கு பல இயற்கைக் காரணிகள் பங்களிப்புச் செய்கின்றன. பனிப்படலங்கள் சேர்ந்து இறுகுவதாலும் லாவா எனப்படும் பாறைக்குழம்பு உறைவதனாலும் குகைகள் உருவாகின்றன. அவ்வாறு உருவாகும் குகைகளின் வெளிச்சுவர், காலம் செல்லச் செல்ல மிகவும் பலம்பெறும். அந்தவகையில், உலகில் காணப்படும் சில அற்புதக் குகைகள் பற்றிய தகவல்கள் இதோ!



## கிறிஸ்டல் குகை

ஐஸ்லாந்தின் ஸ்வினாஃபெல்ஸ்ஜொக்குல் கிளெசியரில் அமைந்துள்ள இந்த குகையை, நீல பளிங்குக் குகை என்றும் அழைப்பர். மழைநீர் மற்றும் கிளெசியர் உருகுவதன் மூலம் கிடைக்கும் நீர் குளிர்ச்சியடைந்து-உறைந்து இந்தக் குகை உருவாகியுள்ளது. இதன் சுவர் எப்பொழுதும் வழுவழுப்பாகவும் நீல நிறமாகவும் இருக்கும். இங்குள்ள பனிப்படலம் நாளொன்றுக்கு ஒரு மீற்றர் வீதம் நகர்கின்றது. ஆகவே, இந்தக் குகை ஆபத்தானதாகவும் கருதப்படுகின்றது.




இ[illegible]கையினுள் நிலவும் கால[illegible]லைக்கு, குகையின் விசாலத்தன்மை முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதேபோல், அங்கு நிலவும் குறைந்த காலநிலையும் நீரை உறிஞ்சக்கூடிய சுண்ணக்கல் சுவர்களும் அதற்கு ஏதுவான மேலும் சில காரணிகளாகும். இத்தகைய சூழ்நிலையே இங்கு முகில் ஏற்பட [illegible] அமைந்துள்ளது.

## முகில்களுடன்கூடிய குகை
### ஏர் வேங்க் டொங்க்

சீனாவில் உள்ள 42 கிலோ மீற்றர் நீளமான ஏர் வேங்க் டொங்க் குகை உலகிலுள்ள மிகப்பெரிய குகைத் தொடராகக் கருதப்படுகின்றது. இந்த குகை யானது, 250 மீற்றர் நீளமும் 150 மீற்றர் விட்டமும் கொண்டது. குகைச் சுவர்மீது புதர்களும் பாசி வகைகளும் வளர்ந்துள்ளன. அதுமட்டுமன்றி, இங்குள்ள சில குகைகளில் முகில்களையும் காணக் கூடியதாகவுள்ளமை விசேட அம்சமாகும்.








## கெபிஹி குகை

ஷுயிடெங்க் ஹே நதி நிலத்தின் கீழ் இறங்குதல்

கெபிஹி குகைத் தொகுதி

மிஆஓ ரூம்

நீர் வெளியே வருதல்

## மாபெரும் குகைத் தொகுதி
### சீனாவின் மிஆஓ ரூம் குகை

தென் சீனாவின் குஅங்ஷி மாகாணத்தில் அமைந்துள்ள கெபிஹி குகைத் தொகுதிக் குரிய மிஆஓ ரூம் குகையானது, 10.78 மில்லியன் கியூபிக் மீற்றர் விசாலமானது. தற்பொழுது உலகிலுள்ள குகைகளில் மிகப் பெரிய குகைத் தொகுதியாக இது கருதப்படுகின்றது. அத்துடன், உலகில் மிகக் குறைந்த ஆராய்ச்சிகளுக்குட்பட்ட குகையாகவும் இது கருதப்படுகின்றது.



30 மீற்றர் நீளமான இந்த படிகங்கள் 350,000 வருடங்களுக்கு முன்னர் உருவானவையாகும். புவியின் உட்பகுதியிலுள்ள வெப்பமான நீரின் காரணமாக மண்ணில் அடங்கியுள்ள கல்சியம், சல்ஃபேட் ஆகியவை கலந்தே இவை உருவாகியுள்ளன. பல நூற்றுக்கணக்கான வருடங்களாக வெப்பநிலையில் எவ்வித மாற்றமும் இல்லாததால் இந்த படிகங்கள் படிப்படியாக வளர்ச்சியடைந்துள்ளன.

## பெரிய படிகங்களுடன்கூடிய கிறிஸ்டல் குகை

மெக்ஸிக்கோவின் சீஹுஆஹுஆன் பாலைவனத்தின் அடியில் பாரிய படிகங்களுடன்கூடிய இந்த குகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த படிகங்கள் செலனைட் மற்றும் மின்னும் ஜிப்சங்களால் உருவாகியுள்ளன. இங்குள்ள படிகங்கள் 4 மீற்றர் விட்டமும் 12 மீற்றர் நீளமும் 55 தொன் நிறையும் கொண்டுள்ளமையால் இந்த குகைக்குள் செல்வது ஆபத்தானது என்று கூறப்படுகின்றது.




### குகையின் வயது

குகையில் அமைந்துள்ள 45 மீற்றர் உயரமான இந்த தூண் மூலம் இதன் வயதை அனுமானிக்கலாம். காபன் அடங்கிய நீர் ஒரே இடத்தில் நீண்டகாலம் விழுவதன் மூலம் இத்தூண் உருவாகியுள்ளது.

தரைமட்டத்தில் இருந்து 325 அடி உயரத்தில் அமைந்துள்ளது.

### பலவீனமான இடம்

191 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ள இந்த இடம் இடிந்துவிழும் நிலையில் உள்ளது.

### நீர் பாய்ந்தோடுதல்

மழைக்காலங்களில் குகையின் ஊடாக நீர் பாய்ந்தோடும்.

### நிழல்கள்

லேஸர் ஸ்கேன் மூலம் நிழல்களை காணக்கூடியதாக இருந்தது.

### மேலும் விரிவடையும் குகை

ஆற்று நீருடன் வரும் கற்கள் குகையினுள் மோதுவதால் குகை மேலும் விரிவடைதலுக்குட்படுகின்றது. போயிங் 747 வகையைச் சேர்ந்த 30 விமானங்கள் குகையினுள் செல்லக்கூடிய அளவிற்கு குகை விரிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### குகையொன்றின் அழிவு

குகையொன்று உருவாவதற்கு ஏதுவாக இருக்கின்ற புவியியல் காரணிகளே, அதன் அழிவுகளுக்கும் காரணமாக அமையும் என கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, சீரற்ற காலநிலையும் குகையொன்றின் அழிவுக்கு காரணமாக உள்ளது.

### குகையை முப்பரிமாண ஸ்கேன் செய்தல்


குகையை முப்பரிமாண ஸ்கேன் செய்தமையால், முன்னர் கண்ணுக்குப் புலப்படாதிருந்த பாதைகள் பலவற்றை கண்டுபிடிக்கக்கூடியதாக இருந்தது.

### குகை அரிப்பு

மழைநீருடன் வரும் கற்களினால் குகை தோண்டலுக்கு இலக்காகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி: 187




### மேலிருந்து கீழ்

01. சிறிய நீர்நிலை.
02. தீமை.
03. கனி- எதிர்ப்பதம். (தலைகீழ்)
04. கொடூரம். (தலைகீழ்)
05. துணி வகைகளில் ஒன்று.
07. மரங்களின் கிளைகளை வெட்டி அழகுபடுத்துவதை இவ்வாறு குறிப்பிடுவர். (தலைகீழ்)


### இடமிருந்து வலம்

01. வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு வழங்கப்படும் உதவிப் பணம்.
03. அதிகம் பறக்க இயலாத தரைவாழ் பறவை இனமொன்று. (மாறியுள்ளது)
04. தானிய வகையொன்று. (மாறியுள்ளது)
05. உரம்.
06. துன்பம்.
07. சீனி போன்று இனிக்கும். (மாறியுள்ளது)


**குறுக்கெழுத்துப் போட்டி: 186 விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 வெ | ண் | 2 மை | | 3 தீ | வு |
| கு | | ந் | | மை | |
| ளி | | 4 த | ரு | | 5 வி |
| | 6 ப | ன் | மை | | ரி |
| 7 ஊ | தா | | 8 பெ | ரி | ய |
| மை | 9 கை | ம் | | 10 ஏ | ன் |

படத்தரவுகளுக்குரிய ஆங்கிலச் சொற்களை உரிய கட்டங்களில் எழுதி, செந்நிறக் கட்டங்களுக்குள் வரும் புதிய சொல்லைக் குறிப்பிடுக




**சரியான எண்ணிக்கையில் வட்டமிடுக**



5 6 4

7 5 8


6 7 5

10 8 9


6 9 8






**அடுத்து வர வேண்டியது எது?**




## அறிவுக்கு விருந்து (27.04.2016) விடைகள்













சொற்களுக்குப் பொருத்தமான படங்களுடன் இணைக்க




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தான்குடி பிஸ்மி அல்குர்ஆன் பாடசாலையின் ஆறாவது சான்றிதழ் வழங்கும் நிகழ்வு காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் பாடசாலையின் பணிப்பாளர் அஷ்ஷேய்க் அல்ஹாபிழ் ஏ.ஆர்.எம்.அஸ்ஹர் (நளீமி) தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாதிஹ் நிறுவனத்தின் விரிவுரையாளர் அஷ்ஷேய்க் அக்ரம் அப்துஸ்ஸமத் (நளீமி) கலந்து சிறப்பித்ததுடன், மேலும் பல விசேட பிரமுகர்களும் பெற்றோரும் வருகை தந்திருந்தனர். இந்நிகழ்வில் பல்வேறு விதமான இஸ்லாமிய கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், அல்குர் ஆன் பாடசாலையின் 70 மாணவ, மாணவிகள் பதக்கமும் சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு, கற்பித்த ஆசிரியர்களும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

விஜய் விழா உலா
த.பெ. என் 2037
கொழும்பு






வெளிமடை-பேறகஸ்வத்தையைச் சேர்ந்த உசைதீன் - வசினாபேகம் தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா அக்ஸா, தனது இரண்டாவது பிறந்தநாளை 09.05.2016 அன்று கொண்டா டினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: உசைதீன்)




ஆயிஷா யாசீர்,
கைரியா மு.ம.கல்., கொழும்பு-09.



எஸ்.சதுர்ஷன்,
சென்.ஜோசப் வித்., மஸ்கெலியா.



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.எண் 2037
கொழும்பு



வி.விஜேந்தினி,
புனித அந்தோனியார் ம.வித்.,
திருகோணமலை.



ப.தினேஷ்கரன்,
கொட்டகலை த.ம.வித்.,
கொட்டகலை.



வி.நிகிலேஷ்,
பண்டாரவளை த.ம.வித்.,
பண்டாரவளை.



சி.லக்சன்,
யா/இந்துக் கல்., யாழ்ப்பாணம்.



ஜெ.அஜய்,
கலைமகள் ம.வித்., நெளுக்குளம்.

# பகிர்ந்து வாழ்தல்

சிலருக்கு பகிர்ந்து வாழும் மனநிலை இருக்கும். ஆனால், பொருளாதார வசதிகள் இருப்பதில்லை. சிலருக்கு பொருளாதார வசதிகள் மிகையாக இருக்கும். ஆனால், பகிர்ந்து வாழ அல்லது பிறருக்கு உதவி செய்ய அவர்கள் விரும்புவதில்லை. தம்மிடம் உள்ளவற்றை அப்படியே பிறருக்கு கொடுத்துவிடும் மனப்பாங்கை அனேகமான பிள்ளைகளிடம் காணலாம். இது பிள்ளைகளின் இயல்பான மன உணர்வு என்றபோதிலும், பெற்றோர்களிடம் இருந்தும் பிள்ளைகள் பல விடயங்களைக் கற்றுக்கொள்கின்றன.

பெற்றோர்கள் கொடையாளிகளாகவும் இரக்கம் நிறைந்தவர்களாகவும் இருந்தால் பிள்ளைகளும் அந்தக் குணங்களைப் பின்பற்றுகின்றன. இதனால்தான் பிள்ளைகளின் முன்நிலையில் பெற்றோர்களின்



நடவடிக்கைகள் பொறுப்புள்ளதாகவும் சரியானதாகவும் அமைய வேண்டும் என்று கூறப்படுகின்றது.

மேலும், ஒருவர் தம்மிடம் உள்ளவற்றை பிறருக்குக் கொடுப்பதன் மூலமும் பகிர்ந்து வாழ்வதன் மூலமும் மற்றவர்களுக்கு உதவுவதன் மூலமும் சமுதாயத்தில் மிக உயர்ந்த மதிப்பையும், அன்பையும் பெற்றவராகின்றார். அத்துடன், செய்யப்பட்ட உதவியின் பிரதியுபகாரமாக எதிர்பாராத அன்பான உதவிகளும் ஆதரவும் அவரைச் சூழ்ந்து கொள்ளும் சந்தர்ப்பங்களும் உள்ளன.



எம்.றிபாக்,
வியாங்கல்லை மு.ம.வித்.,
வியாங்கல்லை.



எஃப்.அம்னா,
அ/அல்- மதீனா வித்., குடாதெழுபேவ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் பிரபல்யமானவர்கள்



இந்தியாவின் மும்பை நகரில் 1965 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதியன்று ஸாகிர் கரீம் அப்துல் நாயிக் பிறந்தார்.

மும்பை புனித பீற்றர் உயர் நிலை கல்லூரியில் ஆரம்பக் கல்வியைக் கற்ற ஸாகிர் நாயிக், மும்பை பல்கலைக்கழகத்தில் மருத்துவத்துறை பட்டப் படிப்பை முடித்து வெளியேறினார். மேலும், மத ஒப்பீட்டாய்வுத் துறையிலும் கற்று தேறிய இவர், சிறந்த இஸ்லாமிய பிரச்சாரகராகவும் தன்னை வளர்த்துக்கொண்டார்.

இவர், இதுவரை அமெரிக்கா முதல் இலங்கை வரை உலகத்தில் பல நாடுகளில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொது நிகழ்வுகளில் பங்கேற்று

## டொக்டர் ஸாகிர் நாயிக்

இஸ்லாம் தொடர்பில் மிகத் தெளிவாகவும் ஆதாரபூர்வமாகவும் விரிவுரைகளை நிகழ்த்தியுள்ளார். தன்னைப்போன்ற ஆயிரக்கணக்கான ஆளுமைகளை உருவாக்க வேண்டும் எனும் நோக்கில் இஸ்லாமிய ஆய்வு மையம் (Islamic Research Foundation) எனும் அமைப்பை தோற்றுவித்து நடாத்தி வருகிறார். இவரது வழிகாட்டலில் இயங்கிவரும் Peace Tv மூலம் உலகெங்கும் மிகச் சிறந்த இஸ்லாமிய நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகி வருகின்றன.

இவரின் அளப்பரிய பணிக்காக பல விருதுகளை வென்றுள்ளதுடன், இவர் இஸ்லாத்திற்கு ஆற்றிய சேவைக்காக அண்மையில், சவூதி அரேபியாவின் உயர் விருதான மன்னர் பைசல் விருதும் வழங்கப்பட்டது. 2009 - 2014 வரையான காலப்பகுதியில் உலகின் செல்வாக்கு மிக்க முதல் 500 முஸ்லிம்கள் பட்டியலில் டொக்டர் ஸாகிர் நாயிக்கின் பெயரும் உள்ளடக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தொகுப்பு: ஜுனைட் எம்.பஹ்த்

# தெரிந்து கொள்வோம்

★ இலங்கையில் எப்போதிலிருந்து நத்தார் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது?

1505 இல் போர்த்துக்கேயர் வருகையுடன்





★ இலங்கையில் முதன்முதலில் ஆரம்பிக்கப் பட்ட அரசியல் கட்சி எது? எப்போது?

இலங்கை சமசமாஜக் கட்சி-1935 இல்

★ ஐக்கிய அமெரிக்காவில் முதன்முதலில் நொபெல் பரிசைப் பெற்ற ஜனாதிபதி யார்?

தியோடர் ரூஸ்வெல்ட்





★ முதன்முதலில் சந்திரனில் தரையிறங்கிய விண்வெளி வீரர்கள், எத்தனை மணித்தியாலங்களை அங்கு செலவிட்டனர்?

2 மணி 31 நிமிடங்கள்

★ UNU என்ற சுருக்கத் தொடரால் குறிக்கப்படும் அமைப்பு எது?

ஐ.நா. பல்கலைக்கழகம் (United Nations University)





★ உலகில் எந்த நகரில் முதன்முதலில் புகையிரதப்பாதை நிர்மாணிக்கப்பட்டது?

லண்டன் நகரில்

தொகுப்பு: உடுவை பரந்தாமன்

## வெல்லுங்கள்! விஜய் – தூவானம் வழங்கும் வாரம் 3 பரிசில்கள்!

★ Practical English Learning Software DVD



★ 4000 English Letter Writing Software




★ 8 GB Pen Drive



புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன்கிழமையிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்கத் தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

★ 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாராந்தம்...

★ ஆங்கிலம் கற்கும் மென்பொருள் DVD

★ 4000 ஆங்கில மாதிரிக் கடிதங்கள் அடங்கிய மென்பொருள்

★ 8GB பென் டிரைவ் போன்றன இலவசமாக வழங்கப்படும்.

*27.04.2016 'தூவானம்' கேள்விக்கான விடை:*

**திருகோணமலை**

**Pendrive** வெற்றியாளர்:

எ.அப்சல்,
ஹுதா நகர்,
கல்பிட்டி.

'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை

Write Message

**F Thoovaanam என Type செய்து 40404 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்**

அனுப்ப வேண்டிய முகவரி:

Pen Drive போட்டி
(11.05.2016)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

**இவ்வார கூப்பன்:**

**11.05.2016**

விடை: ..............................

பெயர்: ..............................

முகவரி: ..............................

தெ.பே.இல: ..............................

பாடசாலை: ..............................

தரம்: ..............................

..................

கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வனப்பு மிகு கடற்கரை 2016

## அகில இலங்கை பாடசாலை மட்ட சித்திரப் போட்டி



### தலைப்பு

கடற் பன்றிகள், கடல் ஆமைகள், கண்டல் தாவர சூழல், பவளப்பாறைகள் ஆகிய கரையோர வளங்கள் மற்றும் கடற்கரை சார்ந்த எந்தவொரு நிகழ்வும்

### போட்டி பற்றிய தகவல்களும் நிபந்தனைகளும்

ஒருவர் ஒரு சித்திரத்தினையே சமர்ப்பிக்க முடியும். சித்திரத்தின் அளவு 35 சென்ரி மீற்றர் மற்றும் 45 சென்ரி மீற்றர் ஆக இருக்க வேண்டும். எந்தவொரு ஊடகத்தினையும் நிறங்களுக்காக பயன்படுத்தலாம். சித்திரத்தின் பின்பகுதியில் போட்டியாளரின் பெயர், தனிப்பட்ட விலாசம், தொலைபேசி இலக்கம், பிறந்த திகதி, கற்கும் பாடசாலை, வகுப்பு, பாடசாலையின் முகவரி மற்றும் போட்டியிடும் பிரிவு ஆகியவற்றினை தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

### போட்டிப் பிரிவு

*முன்பள்ளி மாணவர்கள்:*

ஆரம்ப நிலை: 1, 2, 3, 4, 5 தரங்களை சேர்ந்த மாணவ, மாணவியர்.

கனிஷ்ட பிரிவு: 6, 7, 8, 9, 10 தரங்களை சேர்ந்த மாணவ, மாணவியர்

சிரேஷ்ட பிரிவு: 11, 12, 13 தரங்களை சேர்ந்த மாணவ, மாணவியர்

தமது சித்திரத்தினை 2016 மே 31 ஆம் திகதிக்கு முன்னர் கீழ் வரும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

*'கடற்கரையின் வனப்பு - 2016'*
*அகில இலங்கை பாடசாலை மட்ட சித்திரப் போட்டி,*
*இலங்கை கடல் ஆமைகள் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம்,*
*இல. 150, பழைய காலி வீதி, வலான,*
*பாணந்துறை.*

மேலதிக விபரங்களுக்கு 038- 3370522 என்னும் தொலைபேசி இலக்கங்களினூடாக காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இலங்கை கடல் ஆமைகள் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு அழைப்பினை ஏற்படுத்துங்கள். போட்டிக்கு அனுப்பப்படும் ஓவியங்கள் எக்காரணங்களுக்காகவும் மீள அளிக்கப்பட மாட்டாது.

### பணப் பரிசில்கள்

*முன் பள்ளி*

| | |
|---|---|
| முதலாம் இடம் | ரூ. 7,000.00 |
| இரண்டாம் இடம் | ரூ. 5,000.00 |
| மூன்றாம் இடம் | ரூ. 3,000.00 |

*ஆரம்ப நிலை*

| | |
|---|---|
| முதலாம் இடம் | ரூ. 10,000.00 |
| இரண்டாம் இடம் | ரூ. 7,000.00 |
| மூன்றாம் இடம் | ரூ. 5,000.00 |

*கனிஷ்ட பிரிவு*

| | |
|---|---|
| முதலாம் இடம் | ரூ. 15,000.00 |
| இரண்டாம் இடம் | ரூ. 10,000.00 |
| மூன்றாம் இடம் | ரூ. 7,000.00 |

*சிரேஷ்ட பிரிவு*

| | |
|---|---|
| முதலாம் இடம் | ரூ. 20,000.00 |
| இரண்டாம் இடம் | ரூ. 15,000.00 |
| மூன்றாம் இடம் | ரூ. 12,000.00 |

ஒரு பிரிவில் தெரிவு செய்யப்படும் சிறந்த நூறு சித்திரங்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.



# குரோஷியா

*ஐரோப்பாவில் அமைந்துள்ள குரோஷியா, 1918 இல் சேர்பியா, ஸ்லோவேக்கியா ஆகியவற்றுடன் இணைந்து யுகோஸ்லாவியா என்ற பேரரசை அமைத்தது. அதனை தொடர்ந்து இரண்டாம் உலக யுத்தத்தின் பின் யுகோஸ்லாவியா கம்யூனிச நாடாக மாறியது. அதிலிருந்து 1991 இல் குரோஷியா சுதந்திரம் அடைந்தது. அதன்பின் 2009 இல் 'நேட்டோ' அமைப்பில் இணைந்ததோடு, 2013 இல் ஐரோப்பிய யூனியனோடும் இணைந்தது.*



ஸ்லெவிக் மக்கள் ஆதிக் குடிகளாவர்.



பாரம்பரிய இனக்குழுக்களை இன்றும் இங்கு காணலாம்.




குரோஷியாவானது, புராதன யுகோஸ்லாவியாவுக்கு சொந்தமான ஆறு நாடுகளில் ஒன்றாகும்.

### தேசிய மிருகம், மலர்



தேசிய மிருகம் - மார்டன்
தேசிய மலர் - ஐரிஷ் குரோஷிக்கா மலர்

### இனங்கள்




### மொழி

குரோஷியன் - 95.6%, சேர்பியன் - 1.2%, ஏனையவை- 03%, குறிப்பிடாதவை - 0.2%

### சமயம்

உரோமன் கத்தோலிக்கர் - 86.3%, ஓர்த்டொக்ஸ் - 4.4%, முஸ்லிம்கள் - 1.5%, ஏனையோர் - 1.5%, விஷேடமற்றோர் - 2.5%, சமயமற்றோர் - 3.8%

### அரசியல்



குரோஷியா நாடாளுமன்றம்

ஜனாதிபதி கொலிண்டா கிரேபர்

### இயற்கை வளம்

மசகு எண்ணெய், நிலக்கரி, சிலிக்கா, பொக்சைட், கல்சியம், ஜிப்சம், களிமண், மைக்கா, இரும்பு



குரோஷியாவின் தேசிய கொடி



மொத்த நிலப்பரப்பு ச.கி.மீற்றர் **55,974 km²**

மொத்த சனத்தொகை **4,464,844**



ட்ராவா, சாவா என இரு நதிகள் பாய்கின்றன.



நாணயம் - குனா

பாரம்பரிய உடை.

### தலைநகரமும் பெரிய நகரமும்





பாரம்பரிய நடனம்



70%க்கும் அதிகமான நிலப்பரப்பில் விவசாயம் மேற்கொள்ளப் படுகின்றது.



அதிக மீன் வளம் உள்ளது.



மனித தேவைக்காக கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன.



உலோக உற்பத்தி



ஆடை உற்பத்தி பிரதான கைத்தொழில்.




மசகு எண்ணெய்



கப்பல் கட்டும் தொழில் நடைபெறுகின்றது.



சுற்றுலாத்துறை முக்கிய வருவாய்த் துறையாகும்.



உரோமன் கத்தோலிக்க தேவாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் ரகசிய காப்பகங்கள்

உலகிலுள்ள சில நாடுகள் தமது ரகசியங்களை பாதுகாப்பதற்கென சில காப்பகங்களை அமைத்துள்ளன. அவை உலகின் ரகசிய காப்பகங்களாகக் கருதப்படுகின்றன. அவற்றில் பிரதானமான காப்பகங்கள் பற்றிய விபரங்கள் இதோ...

## வத்திக்கான் ரகசிய ஆவணக் காப்பகம்



உலகிலுள்ள அனைத்து கத்தோலிக்கர்களினதும் மதத் தலைவரான போப் ஆண்டவரின் வாசஸ்தலமான வத்திக்கான் நகரத்தில்தான், வத்திக்கான் ரகசிய ஆவணக் காப்பகம் அமைந்துள்ளது. இங்கு 8 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலத்திலிருந்து சேவையாற்றிய அனைத்து போப் ஆண்டவர்களின் தனிப்பட்ட ஆவணங்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமன்றி, கிறிஸ்தவ மதம் தோன்றுவதற்கு முன்னரான காலப்பகுதி மற்றும் யேசுவின் பிறப்புக்குப் பின்னரான கால நிகழ்வுகளின் பதிவுகளை கையெழுத்து மூலம் பதியப் பெற்ற பிரதிகளின் தொகுப்புகளும் இங்கு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இந்த காப்பகம் 1881 வரை மக்கள் பார்வைக்கு அனுமதிக்கப்பட்டது. ஆனால், தற்போது இங்கு யாரையுமே அனுமதிப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஸ்வால்பார்ட் உலக விதைகள் காப்பிடம்



சுனாமி போன்ற ஒரு பேரனர்த்தத்தால் உலகத்தில் இருக்கும் பயிர்கள் அனைத்தும் அழிந்துவிட்டால், உணவிற்கு தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்கவே நோர்வே நாடு ஸ்வால்பார்ட் உலக விதைகள் காப்பிடம் ஒன்றை நிறுவியுள்ளது. இங்கு உலகில் தற்போது விளையும் அனைத்து வகை பயிர்களின் தரமான விதைகளை பாதுகாத்து வருகின்றனர். நோர்வே நாட்டின் ஆர்க்டிக் பெருங்கடலில் வட துருவத்திலிருந்து 1300 கி.மீற்றர் தொலைவில் ஸ்பிட்ஸ்பேர்ஜன் எனும் தீவிலேயே இந்த காப்பிடம் அமைந்துள்ளது. இங்குள்ள விதைகளுக்கு எவ்வித ஆபத்தும் நேர்ந்துவிடக்கூடாது என்பதற்காகவே, இங்கு யாரையும் செல்ல அனுமதிப்பதில்லை.

## பிரிட்டிஷ் விமானப்படையின் மென்வித் ஹில்

பிரிட்டிஷ் விமானப்படைக்குச் சொந்தமான 'மென்வித் ஹில்' என்ற இந்த ராணுவத் தளம், இங்கிலாந்தின் வடக்கு யோர்க்ஷயரில் அமைந்துள்ளது. இதுதான் உலகிலேயே மிகப்பெரிய மின்னணு கண்காணிப்பு மையமாகக் கருதப்படுகின்றது. இம்மையத்தின்மூலம் அமெரிக்காவும் பிரித்தானியாவும் பல்வேறு நாடுகள் மற்றும் குழுக்களின் தகவல் தொடர்புகளை இடைமறித்துக் கேட்டு உலகின் பாதுகாப்பை உறுதி செய்கின்றமை விஷேட அம்சமாகும்.



## ஏரியா 51



அமெரிக்காவின் நெவாடா மாநிலத்தின் வடக்கே 129 கி.மீற்றர் தொலைவில் 'ஏரியா 51' என்ற ராணுவத் தளம் அமைந்துள்ளது. அமெரிக்காவின் முதன்மையான ரகசியங்களின் காப்பிடம் என்பதால், இங்கு யாருக்கும் அனுமதி இல்லை. வியட்நாம் யுத்த காலத்திலிருந்து அமெரிக்க உளவுத்துறையானது, பல ரகசிய வேலைகளை இங்கிருந்தே மேற்கொண்டு வருகிறது. இங்கு அரசின் மிக முக்கியமான ரகசிய ஆவணங்கள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வார கார்ட்டூன் படம்












# உலகின் உயரமான கட்டடத்தை பின்தள்ளவுள்ள புதிய கட்டடம்

தற்போது உலகில் உள்ள உயரமான கட்டடமாக டுபாய் நகரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 'பர்ஜ் கலிபா' கட்டடம் கருதப்படுகின்றது. இதன் உயரம் 829.8 மீற்றராகும். எனினும், சவூதி அரேபியாவின் ஜித்தா நகரில் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற 'ஜித்தா டவர்' (கிங்டம் டவர்) ஆனது, பர்ஜ் கலிபா கட்டடத்தைவிட, உயரம் கூடியதாக இருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது. அதன்படி, எதிர்வரும் காலத்தில் உலகின் உயரமான கட்டடமாக 'ஜித்தா டவர்' திகழும் எனக் கருதலாம். இந்த கட்டடம் 1,008 மீற்றர் உயரம் கொண்டதாக நிர்மாணிக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2020 ஆம் ஆண்டில்தான் ஜித்தா டவரின் நிர்மாணப் பணிகள் நிறைவடையவுள்ளதாக கூறப்படுகின்றது.




# மிகப் பெரிய புத்தகம்



உலகில் இதுவரை அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ள புத்தகங்களில், மிகப் பெரிய புத்தகத்தையே இங்கு காண்கிறீர்கள். பூட்டான் பற்றிய கண்கவர் புகைப் படங்களுடன், டிஜிட்டல், புகைப்பட மற்றும் அச்சிடல் நுட்பங்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய இந்த புத்தகத்தின் பெயர் Bhutan: A Visual Odyssey Across the Kingdom என்பதாகும். அமெரிக்காவின் மசாச்சுசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தின் முன்னாள் பேராசிரியரான மைக்கல் ஹோவ்லி என்பவரே, இந்த புத்தகத்தின் எழுத்தாளரும் பதிப்பாளரும் ஆவார். இந்த புத்தகம் 133 இறாத்தல் எடை கொண்டது. இதன் நீளம் 5 அடி 7 அங்குலமாகும். 112 பக்கங்களைக் கொண்ட இந்த புத்தகத்தினை அச்சிட பல கொள்கலன் மை தேவைப்பட்டதாகக் கூறப்படுகின்றது.



# வலசை போகும் பறவைகள்

சுற்றாடலில் நிலவும் பருவமாற்றங்களுக்கு ஏற்ப, பறவைகள் தாம் வாழும் இடத்திலிருந்து குழுக்களாக இடம் பெயர்வதே 'வலசை போதல்' என அழைக்கப்படுகின்றது. அதன்படி, கோடை காலத்தில் குளிர்ந்த இடங்களை நோக்கியும், குளிர்காலத்தில் வெதுவெதுப்பான இடங்களை நோக்கியும் பறவைகள் வலசை போகும். இந்த செயற்பாடானது, அவற்றின் உணவுத் தேவை, இனப்பெருக்க காலம், குஞ்சுகளுக்கு உணவைப் பெற்றுக் கொடுத்தல், உடலுக்கு சாதகமான தட்பவெப்பநிலை போன்ற பல்வேறு தேவைகளின் அடிப்படையிலேயே இடம்பெறுகின்றது.

வலசை போகும் பறவைகளின் முக்கிய தரிப்பிடங்களில் இலங்கையும் ஒன்றாகும். வடதுருவத்தில் இருந்து இடம்பெயர்ந்து வரும் பறவைகள் பருத்தித்துறை, சிலாபம், மன்னார், முல்லைத்தீவு, கோகிளாய் ஆகிய பகுதிகளூடாக நாட்டிற்குள் பிரவேசிக்கின்றன.



இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2016, மே 11 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday May 11, 2016.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org